Registered as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10

# ஈழநாடு

EELANADU

தபால்பெட்டி எண். 49
போன் 389

National Tamil Daily

மலர் 10
இதழ் 18
தேசியதினசரி

[illegible] மாசி 16 ஜுல்ஹஜ் 28 புதன்கிழமை (28-2-68)

எகடொக்ஸ் - 50
அதிகசக்தி வாய்ந்த சர்வகிருமி நாசினி
"எகடொக்ஸ் - 50"ஐ
உங்கள் கமத்தில் பாவித்து
அதிக இலாபத்தைப் பெறுங்கள்.
விலையோ மிகவும் மலிவு
சக்தியோ மிகவும் அதிகம்
விநியோகஸ்தர்கள்:
சிலோன் மேர்ச்சன்ஸ்
லிமிற்ரெட்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
போன்: 234

# கல்விமசோதா பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட மாட்டாது

## மருத்துவ மாதர் வேலைநிறுத்த பயமுறுத்தல்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்நகரத்து மருத்துவ மாதர்கள் எந்த நேரத்திலும் வேலை நிறுத்தத்தில் இறங்கலாம் எனத்தெரிகின்றது. இதனால் இங்குள்ள கர்ப்பிணிகளுக்குக் கஷ்டம் ஏற்படலாமெனவும் அஞ்சப்படுகின்றது.

இங்குள்ள 10 மருத்துவ மாதர் நிலையங்களில்கடமையாற்றும் மருத்துவ மாதர்களின் ஒருவருக்கு இடமாற்றத்தில் அளிக்கப்பட்ட சலுகைதான் இதற்குக் காரணமென்று சொல்லப்படுகின்றது. இந்த வேளையில் வேலை நிறுத்தத்தில் இறங்க எண்ணியிருக்கும் மருத்துவ மாதர்களுக்கு யாழ் மாநகர சபை சுகாதாரப்பகுதியினர் எச்சரிக்கை யொன்றையும் விடுத்துள்ளனராம். [கா. நி]

## விதிகள் யாவும் நிர்வாக ரீதியில் அமுலாக்கப்படும்

கொழும்பு, செவ்.

பார்லிமெண்டில் சமர்ப்பிக்கப்பட விருந்த பொது, தொழில் நுட்ப கல்வி மசோதாவைக் கைவிடுவதெனக் கல்விமந்திரி திரு. ஐ. எம். ஆர்.ஏ. இரியகொலலை தீர்மானித்துள்ளார்.

இம்மசோதாவில் அடங்கியுள்ள விதிகள் அனைத்தையும் நிர்வாகரீதியாக அமுல் நடத்துவதெனக் கல்வி மந்திரி முடிவு செய்துள்ளார்.

உத்தேச பொது, தொழில் நுட்ப கல்விமசோதாவைப் பார்லிமெண்டில் சமர்ப்பிப்பதில்லை என்ற கல்வி மந்திரியின் இம்முடிவுக்குக்காரணம், தற்போதுள்ள சட்டத்தின் கீழேயே உத்தேசமசோதாவிலுள்ள விதிகளை அமுல் நடத்துவதற்கான அதிகாரங்கள் போதியளவு இருப்பதினாலேயேயாகும்.

### செயற்கமிட்டி இசைவு

கல்வி மந்திரிநேற்று நடைபெற்ற யூ. என்.பி. செயற்கமிட்டிக் கூட்டத்தில்தமது உத்தேசக் கல்வி மசோதாவுக்குப் பலர் தடைகள் போட முயற்சிப்பதாகக் கூறினார்.

செயற் கமிட்டி, மசோதாவில் உத்தேசித்தபடி பள்ளிக் கூடங்களை சிரமைக்க கல்வி மந்திரிக்கு தனது இசைவை அளித்துள்ளது. பிள்ளைகளின் கல்வி, அவர்களின் தாய் மொழி மூலமாகவே புகட்டப்பட வேண்டும்; போதனைமொழி என்ற ரீதியில் ஆங்கிலத்தின் நிலையைக் குறைத்தல்; 8-ம்வகுப்புடன் மாணவர்களைத் தரம் பிரித்தல்; இவ்விதிகள் உட்பட, உத்தேச கல்வி மசோதாவில் குறிப்பிடப்பட்ட மற்றைய விதிகளும் நிர்வாக ரீதியாகக் கல்வி மந்திரியால் அமுல் நடத்தப்படும் எனத் தெரிகிறது.

### ஏற்கனவே அமுல்

இவ்விதிகளில் பல ஏற்கனவே கல்வி அமைச்சினால் அமுல் நடத்தப்பட்டு வருவதாகக் கல்வி மந்திரி திரு. இரியகொல்லை 'ஈழநாட்டு' நிருபரிடம் தெரிவித்தார்.

## யாழ்ப்பாண வள்ளத்தை இந்திய பொலிஸார் தேடுகின்றனர்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வள்ளமொன்றையும், இருவரையும் இந்தியப் பொலிஸ் பகுதியினர் தேடி வருகின்றார்களாம். இது சம்பந்தமான அறிவித்தல் ஒன்று வடபகுதி பொலிஸ் தலைமைக் காரியாலயத்துக்குக் கிடைத்துள்ளது.

இங்கிருந்து கள்ளக் கடத்தல் பொருட்களுடன் இந்தியா சென்ற வள்ளமன்றே இப்போது தேடப்பட்டுவரும் வள்ளமாகும். சென்ற வருட பிற்பகுதியில் நடைபெற்ற இச் சம்பவத்தைத் தொடர்ந்து இப்போது பொலிஸாரால் தேடப்பட்டுவரும் இருவரில் ஒருவர் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த சமாதான நீதவான் எனவும் பொலிஸாருக்குத் தெரியவந்துள்ளதாம்.

இந்தியா சென்ற இந்த வள்ளமும், மேலும் நால்வரும் இந்திய அரசாங்கத்தால் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டிருந்தார்களாம். இங்கு பதிவு செய்யப்படாத சம்பந்தப்பட்ட வள்ளத்துக்கு வேறொரு பொய்யான பதிவு இலக்கத்தைக் கொடுத்த இந்த நால்வரில் இருவர் வள்ளத்துடன் தப்பி இங்கு வந்துவிட்டதாக பொலிஸாருக்குக் கிடைத்த அறிவித்தலில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட வள்ளத்தைக் கண்டுபிடிப்பதிலும், சந்தேக நபர்களைக் கைது செய்வதிலும் பொலிஸ்பகுதியினர் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். (கா. நி)

## பஸ்சேவை சீர்கேடுகள் 10-திகதிவரை தெரிவிக்கலாம்

### உபகுழு அறிவிப்பு

யாழ்ப்பாணம், புதன்

இலங்கை போக்குவரத்துச் சபையில் சேவையிலுள்ள சீர்கேடுகள் பற்றி தமது அபிப்பிராயங்களைத் தெரிவிக்க விரும்புபவர்கள் அடுத்தமாதம் 10-ம் திகதி வரை தெரிவிக்கலாம் என இதற்கென அமைக்கப்பட்ட உபகுழு அறிவித்துள்ளது.

அனுப்பப்படும் அபிப்பிராயங்களும், புகார்களும் பரிபாலனக்கிளை, கச்சேரி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட வேண்டுமென்றும், ஒவ்வொரு புகாரிலும் 5 பிரதிகள் அனுப்பிவைக்கவேண்டுமென்றும் இக்குழுவின் தலைவரான யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை தெரிவித்தார்.

அடுத்தமாதம் 11-ம் திகதி நடைபெறவிருக்கும் இக்குழுவின் கூட்டத்தில் பொது மக்களின் அபிப்பிராயங்களும், சீர்கேடுகளும் குழுவினால் சரியான முறையில் பரிசிலனை செய்யப்படும். அவசியமேற்படும்போது சம்பந்தப்பட்ட மனுதார்களும் விசாரணைக்கு அழைக்கப்படலாமெனத் தெரிகின்றது.

வடபகு பஸ் சேவைச் சீர்கேடு பற்றி ஆராய்ந்து தக்கநடவடிக்கைகளை மேற்கொண்டு போக்குவரத்து அமைச்சுக்கு அறிவிக்க நியமிக்கப்பட்ட இக்குழுவில் செனட்டர் நடராஜா, வட[illegible]

## பனம் பொருள்களை ஏற்றுமதி செய்ய தனியார் நடவடிக்கை

### கூட்டுறவு சமாஜம் வடபகுதியில் உருவாகும்

யாழ்ப்பாணம், புதன்

வடபகுதி பனம்பொருள்களை வெளிநாடுகளுக்கும் ஏற்றுமதிசெய்வதற்கான நடவடிக்கையை இங்குள்ள பனம்பொருள் உற்பத்தியாளர்கள் மேற்கொண்டுவருகிறார்கள்.

இவ்வித பொருள்களை அதிக அளவில் தயாரித்து ஏற்றுமதிசெய்வதற்கென கூட்டுறவு சமாஜம் ஒன்று உருவாக்கப்பட விருப்பதாகத்தெரியவருகிறது.

பனையிலிருந்துபெறப்படும் கிழங்குபோன்ற உணவுப் பொருள்கள், மருந்துக்கு உபயோகப்படுத்தப்படும் பனங்கட்டி மற்றும் பாவிப்புக்கு உபயோகப்படுத்தும் தும்பு, பனை ஓலைப்பாய்கள் ஆகியவற்றை [illegible] அதிகமாகத் தயாரித்து சிறந்தமுறையில் விநியோகம் செய்து ஒரு பகுதியை ஏற்றுமதி செய்யவும் இந்த சமாஜம் ஏற்ற ஒழுங்குகளைச் செய்யும் எனத்தெரிகிறது.

பனம்பொருள்களால் அதிக பயன்கிடைக்கக்கூடியதாகவிருக்க இத்துறையில் ஆர்வம் காட்டி ஊக்குவிக்க நல்லதொரு இயக்கம் இல்லாததாலேயே இப்பொருள்களால் அதிகபயன்பெற முடியாதிருப்பதாகவும் இங்குள்ள உள்ளூர் உற்பத்திப்பொருள் விற்பனை நிலையங்கள் இவற்றுக்குப் போதிய முக்கியத்துவம் கொடுக்காதிருப்பதும் இப்பொருள் விற்பனைக் குறைவுக்கு காரணம் எனவும் கருதப்படுகிறது.

இதன்காரணமாகவே பனம்பொருள்க[illegible] சம்பந்தமாக மேலும் ஆராய்ச்சி நடத்தி இதற்குப்போதிய ஊக்கம் காட்டி உற்சாகப்படுத்த தனியான இயக்கம் ஒன்று உருவாகவிருக்கிறது. மேற்படி கூட்டுறவு சமாஜம் பனம் பொருள் உற்பத்தியில் அதிக அக்கறை செலுத்துவதோடு இத்துறையில் பலருக்கும் ஊக்கம் கொடுத்து அதிகமானவர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்க திட்டமிடவிருப்பதாகவும் தெரிகிறது. [கா. நி.]

பிராந்திய இ. போ. ச. அதிபர் திரு. எஸ். வேலுப்பிள்ளை, யாழ்ப்பாண தபால் பகுதி அதிகாரி திரு. ரி. தர்மலிங்கம் ஆகியோரும் அங்கம் வகிக்கின்றனர். [கா. நி.]

## 'சமூகம் நன்மைபெற இளைஞர் முன்வர வேண்டும்'

வவுனியா, செவ்.

சொல்லும் செயலும் ஒத்த கரும வீரர்கள் ஒன்று சேர்ந்து செயலாற்றும் போது சமூகம் அளவிறந்த நன்மைகளைப்பெறமுடியும். அதற்கு ஸ்தாபன ரீதியில், ஆத்மீக அடிப்படையில் செயலாற்ற இளைஞர்கள் முன்வர வேண்டும். அப்பொழுது தான் இந்நாடு சுபீட்சமடையும்.

இவ்வாறு வவுனியா மேலதிக அரசாங்க அதிபர் திரு. அ. பெருமையினார் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தின் புனரமைப்புக் கூட்டத்தில் உரை நிகழ்த்தும்போது குறிப்பிட்டார்.

கூட்டத்திற்கு திரு. சதா. ஸ்ரீநிவாசன் தலைமை வகித்தார்.

தலைவர் தமது முன்னுரையில் சங்கம் பதின்மூன்று வருடங்களுக்கு முன்னர்

[8ம் பக்கம் பார்க்க]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரிவிளம்பரம்

### விற்பனைக்கு

**காணி**

கொடிகாமம் புகையிரத நிலையத்திற் கருகாமையில் 65 பரப்பு தென்னங்காணி விற்பனைக்கிருக்கிறது விபரங்களுக்கு:- ஏ. கிருஷ்ண பிள்ளை, 225, காங்கேசன் துறை வீதி. யாழ்ப்பாணம். 1747

**காணி**

திருநெல்வேலி வடக்கு சந்திக்கு அண்மையில், பலாலி வீதியில் றோட்டு முகப்புடன் கூடிய சதுரமான காணி 2 1/2 (இரண்டரைப் பரப்பு) கிணற்றுப் பங்குடன் விற்பனைக்குண்டு. விபரம் நேரில் திருநெல்வேலி ஸ்ரோர்ஸ், திருநெல்வேலி 1754

### தேவை

ஊவா குடா-ஓயாவில் வேலை செய்வதற்கு ட்ராக்ட்டரும், லொறியும் ஓட்டுவதற்கு லைசென்ஸ் பெற்றுள்ள ட்ராக்டர், புல்டோசர் மெக்கானிக்குகள் தேவை. மணமாகாதவர்கள் விரும்பத்தக்கது. டீசல் என்ஜின்கள், ட்ரான்ஸ்மிஷன் வேலைகளிலும் பழுதுபார்க்கும் வேலைகளிலும் முதல் தர கொம்பனிகளில் குறைந்த பட்சம் பத்துவருட அனுபவம் அவசியம். விண்ணப்பம் செய்பவர்கள் அந்த இயந்திரங்களை செலுத்த வேண்டும். விண்ணப்பிக்கவும்:— ஜி. ஜனார்த்தனன், ஊவா குடா-ஓயா, வெல்லவாயாவிலிருந்து 15 மைல். அம்பாந்தோட்டையிலிருந்து 35 மைல், 183-வது கட்டையடிக்கு சமீபம். அல்லது எஸ். முகம்மது ஹுசெயின், 135, மீந்தோட்ட முல்லைதெரு, வெல்லம்பிட்டியா, கொழும்பு. 1886

## நெல்லியடிக்கு விரைவில் மின்சாரம்

உடுப்பிட்டி, செவ். நெல்லியடிப் பட்டினம் விரைவில் மின்சாரவெளிச்சம் பெறப்போகிறது. இதற்கான துரித நடவடிக்கைகளில் நெல்லியடிப் பட்டின சபை ஈடுபட்டுள்ளது.

நெல்லியடி மின்சார விநியோகத்திற்கான கேள்விப் பத்திரங்கள் சென்ற 15ம் திகதி நெல்லியடிப்பட்டின விசேஷ ஆணையாளர் திரு. எஸ். முருகவேளினாலும் மின்சார இலாக்காவைச் சேர்ந்த பொறியியல் உத்தியோகத்தராலும் கேள்விக்காரர்கள் முன் திறக்கப்பட்டுக் கேள்விகள் தெரிவுசெய்யப்படுவதற்காக மின்சாரத் தலைமை காரியாலயத்திற்கு அனுப்பப்பட்டுள்ளன.

## சுழிபுரம் கி. ச. தீர்மானம்

சுழிபுரம், செவ்வாய் சுழிபுரம் கிராமசபைப் பகுதிக்கு மின்சாரம் வழங்க உள்ளூர் அபிவிருத்திக் கடன் நிதிச்சபையினரிடம் ரூபா ஒரு லட்சத்து தொண்ணூற்றொன்பதினாயிரம் கடனைப் பெற்றுக்கொள்ள சுழிபுரம் கிராமசபையினர் ஏகமனதாகத் தீர்மானித்துள்ளனர்.

கிராமசபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி தலைமையில் நடைபெற்ற கூட்டத்தின் போதே இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### தேவை

யாழ் மாவட்டத்தில் நல்ல முறையில் இயங்கும் பெற்றோல் செட்டிலும், கடையிலும் வேலை செய்வதற்கு பொறுப்பு வாய்ந்த கணக்கப்பிள்ளை தேவை. (வயது 30—45) இ. க. ஆறுமுகம் 76, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசத்துக்கு எழுத்து மூலம் விண்ணப்பிக்கவும். 1753

## "புனிதமான இயக்கம்"

சுழிபுரம், செவ்வாய் "சாரணர் இயக்கம் ஒரு புனிதமான இயக்கமாகும். உண்மை, நேர்மை, கடமை ஆகிய இலட்சியங்களே அதன் நோக்காகும். இன்று சாரணர் உடையை அணிந்துள்ள சாரணர் கடமைக்காக உடையை அணியாது, அவ்வுடையின் நோக்கு, பிரதிபலிக்கக்கூடிய வகையில் அதன் மகிமையைக் காக்கச் சேவைசெய்யவேண்டும். சாரணப்படை பெயருக்காக மட்டும் இயங்காமல் பேடன் பவுல் கண்ட கனவு நனவாகும்வகையில் இயங்கவேண்டும். அதுவே நாம் அப்பெரியாருக்குச் செய்யும் அஞ்சலியாகும்." இவ்வாறு வடடுக்கோட்டை இந்துக்கல்லூரிச் சாரணர் இயக்கம் நடாத்திய பேடன் பவுல் தினவிழாவில் உரையாற்றிய மேற்படி கல்லூரி உப அதிபர் திரு. கே. கைலாயநாதன் குறிப்பிட்டார்.

விழாவுக்குச் செல்வன் ந. இராசலிங்கம் தலைமைவகித்தார். பாசறை கட்டுதல், கொடியேற்றல், தேநீர் விருந்து ஆகிய நிகழ்ச்சிகள் நடைபெற்றன. சாரணர் ஆசிரியர் திரு. கே. பத்மநாதன் உட்பட மற்றும் பலர் பேசினர். இன்னிசை நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து 'மிஸ்டர் ஆடம்பரம்' 'நீயே உணர்வாய்' ஆகிய நாடகங்களும் நடைபெற்றன.


ராஜா
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சி
10-வது வாரம்
எம். ஜி. ஆர்.-ஜெயலலிதா நடித்த
காவல்காரன்

3-வது வாரம்
நியூ காலிங்கன்
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
தினசரி 2-30 க்கு மெற்னி
எஸ். எஸ். ராஜேந்திரன்
காஞ்சனா - தேவிகா
நடித்த
மறக்க முடியுமா?

மனோகரா
[யாழ்ப்பாணம்]
தினசரி
2-45, 6-45, 10-00
போயா தினங்களில்
10-45 மெற்னி.
ராணி
[யாழ்ப்பாணம்]
தினசரி
2-30, 6-30, 9-30.
போயா தினங்களில்
10-30 மெற்னி.






ஜெய்சங்கர்
விஜயலக்ஷ்மி
நடித்த
சபாஷ் தம்பி

REGAL JAFFNA
Daily at
4-40, 7-00, & 9-45 p.m.
Richard Widmark
&
Rosanna [illegible]
in
THE LONG SHIPS



இப்பொழுது திரையிடப்படுகிறது!
கிங்ஸ்லி [கொழும்பு]
விஜயா [மட்டுநகர்]
பிளாஸா [வெள்ளவத்தை]
ஸ்ரீகிருஷ்ணா [திருமலை]
வெலிங்டன் [யாழ்ப்பாணம்]
விஜிதா [ஹட்டன்]


சிவாஜி கணேசன்— சாவித்திரி
ஜெமினி கணேசன், பத்மினி,
கே. ஆர். விஜயா, தேவிகா, நாகேஷ்
மற்றும் பலர் நடிக்கும்
சரஸ்வதி சபதம்
(ஈஸ்ட்மென் கலர்)


**மரணத்தில் சந்தேகம்**

# புதைகுழியிலிருந்து சடலம் தோண்டி எடுக்கப்பட்டது

யாழ்ப்பாணம், புதன் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவரின் சடலம் புதைகுழியிலிருந்து மீண்டும் தோண்டி எடுக்கப்பட்டது. இச்சம்பவம் மன்னார் பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

மரணமான மன்னாரைச் சேர்ந்த ஸ்ரனிஸ்லோஸ் என்பவரின் சடலம் ஏற்கனவே மரண விசாரணையின் பின்னர் இயற்கை மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டு அடக்கம் செய்யப்பட்டது. இதுசம்பந்தமாக தற்போது கிடைத்துள்ள சில இரகசிய தகவல்களைத் தொடர்ந்து பொலிசார் மேலும் விசாரணையை மேற்கொண்டுள்ளார்.

மரணமானவர் அறையொன்றிற்குள் பூட்டப்பட்டு 'பெல்ட்' டினால் அடித்துக் கொலை செய்யப்பட்டிருக்கலாமென்று பொலிசாருக்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இவர் மன்னாரிலிருந்து முருங்கன் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு மரணமானது பொலிசாருக்கு மேலும் சந்தேகத்தைக் கொடுத்துள்ளது.

தோண்டி எடுக்கப்பட்ட ஸ்ரனிஸ்லோஸின் சடலம் தற்போது பரிசோதனைக்காக கொழும்பிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பொலிஸ் சுப்பிரின்டன் உத்தரவைத் தொடர்ந்து மன்னார் பொலிசார் புலன் விசாரணையை மேற்கொண்டுள்ளனர். [கா. நி]

## வடமராட்சி வர்த்தகமாணவர்
# தமிழக அமைச்சருக்கு கோரிக்கை

உடுப்பிட்டி, செவ். "தமிழ்மொழி பல இடங்களிலும் பல வகையாகப் பேசப்பட்டாலும் எழுதும் போது ஒரே வழியில்தான் எழுதப்படவேண்டும். இவ்வாறு தமிழை எழுதும் போது ஆங்கில மொழிகலக்காமல் தனித்தமிழில் எழுதவேண்டியது மிகவும் அவசியமானது. பாங்க் என்ற ஆங்கிலச் சொல்லுக்குத் தமிழில் ஏற்ற சொல்லைத் தெரிந்து எழுதும் போது பாங்க் என்று எழுதினால் தமிழும் கெட்டு ஆங்கிலத்தின் சரியான உச்சரிப்புக்கும் இடம் இல்லாமல் போகிறது. ஒப்பீஸ் என்ற ஆங்கிலச் சொல்லை ஆபீஸ் என்று எழுதும் போதும் இப்படியே நேரிடுகிறது. ஆனால், பாங்கை வங்கி என்றும் ஒப்பீஸைக் கந்தோர் அல்லது காரியாலயம் என்றும் எழுதும்போதும் ஆங்கில உச்சரிப்பில் நாங்கள் தலையிடாமல் தமிழையும் கெடாமல் பாதுகாக்க முடியும். மேற்சொன்ன மாதிரியான தவறுகள் சில இந்தியப் புத்தகங்களில் பெரும்பாலும் காணக் கூடியதாகவுள்ளது.

உதாரணமாகத் திரு. ஆறுடையபிள்ளை எழுதிய வணிகஇயலின் தத்துவம் என்ற புத்தகத்திலும் வேறுபொருளியல் புத்தகங்களிலும் இப்படியான முரண்பாடான சொற்கள் காணப்படுகின்றன. நாங்கள் வர்த்தக மாணவர்கள் என்பதனாலேயே இவைகளை அறிய முடிந்தது. வேறுபாட நூல்களிலும் இப்படி இருக்கலாம் சென்றல் பாங்க் என்றால் மையபாங்கு என்று எழுதாமல் மத்திய வங்கி அல்லது மையவங்கி இன்சூரன்ஸ் பாலிசி என்று எழுதாமல் அதற்கும் ஒரு நல்ல சொல்லு ஏற்றதாக நட்ட ஈட்டொழுங்கு என்று அல்லது வேறு விதமாக எல்லாத் தமிழ் மாணவர்களுக்கும் ஒரேவகையான தமிழ்க் கலைச் சொற்களைப் பாவித்துப் புத்தகங்கள் எழுதக் கூடிய வழிகளைத் தாங்கள் செய்தால் மிகவும் சிறந்த பணியைச் செய்யக் கோரிய புகழை நாங்கள் அடைவோம்.

இவ்வாறுகோரும் வேண்டுகோள் ஒன்றினை வடமராட்சி வர்த்தக மாணவர் சங்கம் தமிழகக் கல்வி அமைச்சர் திரு: இரா. நெடுஞ்செழியனுக்கு விடுத்துள்ளது.

அம்மகஜரில் மேலும்குறிப்பிட்டுள்ளதாவது:—

"எந்த நாட்டவர்களும் அந்நாட்டின் சூழ்நிலைக்கேற்பப் புத்தகங்கள் எழுதினாலும் அவற்றிலுள்ள கலைச் சொற்கள் எல்லா நாட்டுத் தமிழ்ப் பிள்ளைகளுக்கும் பொதுவாக விளங்கக்கூடிய ஒரே தமிழ்ச் சொல்லாக அமையக் கூடிய வகையில் சகல நாட்டுக் கல்வி அமைச்சர்களும் நடவடிக்கை எடுத்தால் தமிழுலகு மிகவும் பயன்பெறும். எனினும் சிறப்பாக இந்தியாவும், இலங்கையும் ஒன்று கூடி இச்சொற்களை ஒரேமாதிரியாக அமைத்துத் தங்கள் தாய் பிள்ளை உறவை மேலும்பலப்படுத்தவேண்டும். இதற்குத் தாங்கள் எமது கல்வி அமைச்சருடன்தொடர்பு கொண்டுஆவன செய்ய வேண்டும்.

அத்துடன் தாய் மொழியில் நாங்கள் பலவகைப் பாடங்களையும் படிக்கக் கூடிய முயற்சியை மேற்கொள்ளும் இச்சந்தர்ப்பத்தில் ஆங்கில உச்சரிப்பை அப்படியே தமிழில் எழுதும் பழக்கத்தை விட்டு விட்டு அவற்றிற்கேற்ற தமிழ்ச் சொற்களை ஆக்க வேண்டியது மிகமுக்கிய மானதாகும்."

### கி. ச. தேர்தல்

பூநகரி, செவ் விரைவில் நடைபெறவிருக்கும் பூநகரிக் கி. ச. தேர்தலில் சுயேச்சை அபேட்சகர்களே போட்டியிடுவர் எனத் தெரிகிறது. இக்கிராமசபை எட்டு வட்டாரங்களைக் கொண்டதாகும்.


பவரின்
காய்கறிப் போறை





A B C
ஏ. பவர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உலக கம்யூனிஸ்ட் மாநாடு புடாபெஸ்டில் ஆரம்பமாகியது

## சீனா பகிஷ்கரிப்பு

புடாபெஸ்ட், பெப். 27

உலகக் கம்யூனிஸ்ட் மாநாடு, புடாபெஸ்டில் ஆரம்பமாகியுள்ளது. ஐந்து வருடங்களுக்கு முன் மாஸ்கோவில் நடந்த கம்யூனிஸ்ட் உச்சிமகாநாட்டுக்குப் பிறகு, கம்யூனிஸ்ட் நாடுகள் கூடுவது இதுவே முதற் தடவையாகும்.

இம் மாநாட்டில் 64 தூதுகோஷ்டிகள் கலந்துகொண்டிருக்கின்றன. உலகக் கம்யூனிஸ்ட் நாடுகளில் முக்காற் பகுதி இம் மகாநாட்டில் பிரதிநிதித்துவம் செய்யப்பட்டுள்ளது.

### இவை கலந்துகொள்ளவில்லை

சீனா மாநாட்டைப் பகிஷ்கரித்துள்ளது.

அல்பேனியா, வடவியட்னும், வடகொரியா, கியூபா ஆகிய நாடுகளும் இம் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை

# கீன்யாவிலிருந்து லண்டன் செல்லும் ஆசியர்

## தினசரி 1000 பேர்

நைரோபி, பெப். 27

கீன்யாவிலிருந்து லண்டன் செல்லும் ஆசியர்களின் தொகை நாளுக்குநாள் ஆயிரமாகப் புதிய உயர்மட்டத்தை எட்டிப்பிடித்துள்ளது.

பிரிட்டிஷ் பாஸ்போர்ட் உள்ளவர்கள் லண்டன் வருவதைத் தடைசெய்யும் புதிய பிரிட்டிஷ் குடியேற்ற மசோதா ஒன்று அடுத்த வியாழக்கிழமை சட்டமாவதற்கு முன்பாகப் பிரிட்டன் செல்லும் நோக்கத்துடன், விமானங்களில் இடம்பிடிப்பதற்கென இங்குள்ள விமான நிலையங்களைக் கீன்யா ஆசியர்கள் முற்றுகையிட்டுள்ளனர். விமானங்களில் 'டிக்கெட்' பதிவு செய்ய நிற்கும் பிரயாணிகளின் 'கியூ'க்கள் சில இடங்களில் ஏறத்தாழ 4 மைல் தூரம் நீண்டிருக்கக்காணப்பட்டன.

நைரோபியிலிருந்து லண்டன் செல்லும் எல்லா விமானங்களிலும் ஏற்கனவே ஆசனங்கள் பதிவுசெய்யப்பட்டுவிட்டன.

இதற்கிடையில் புதிய குடியேற்றச் சட்டத்தைத் தளர்த்துமாறு பிரிட்டிஷ் அரசாங்கத்தை வற்புறுத்தும் நோக்கத்துடன் கீன்யாவிலிருந்து 4 பேரடங்கிய தூதுகோஷ்டியொன்று லண்டன் சென்றடைந்துள்ளது.

இவ்விஷயத்தில் பாப்பரசரின் உதவிகோரி, கீன்யாவில் உள்ள ஆசிய கத்தோலிக்கர் பாப்பரசருக்குத் தந்தி அனுப்பியுள்ளனர்.

# வியட்னும் போரில் தீவிரமான கொள்கை

## அமெரிக்கா தீர்மானம்

வாஷிங்டன், பெப். 27

அமெரிக்கா, வியட்னும் போரில் மேலும் தீவிரமான போக்கை அனுசரிக்கத் தீர்மானித்துள்ளதாக வாஷிங்டன் செய்திகள் தெரிவிக்கின்றன.

வியட்னுமில் உள்ள அமெரிக்க துருப்புகளின் தொகையை அதிகரிப்பதெனவும் அமெரிக்க அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

இதுபற்றிய முக்கியமான ஒரு முடிவு, இவ்வார பிற்பகுதியில், அமெரிக்க முப்படைத் தளபதிகளின் தலைவரான ஜெனரல் வீலர், அமெரிக்க ஜனாதிபதி ஜோன்சனைச் சந்தித்து, வியட்னும் நிலைமையை விவாதிக்கும் போது, எடுக்கப்படலாமெனத் தெரிகிறது.

இதற்கிடையில், வியட்னும்போர் பற்றிய அமெரிக்க அரசாங்கத்தின் கொள்கையை, அமெரிக்க செனேட் வெளிவிவகாரக் கமிட்டியின் தலைவரான செனேட்டர் புல்பிரைட் மீண்டும் கண்டித்துள்ளார்.

செனேட் சபையில், அமெரிக்க வியட்னும் கொள்கைக்கு எதிர்ப்பு வளர்ந்துவருவதாகக் கூறப்படுகிறது.

# சண்டை தொடருகிறது

சைகோன், பெப். 27

தென்வியட்னுமில், வியட்கொங்கியருக்கும் அமெரிக்கருக்குமிடையே சண்டை தொடர்ந்து நடைபெறுகிறது. இருசாராருக்கும் எவ்விதகுறிப்பிடத்தக்க வெற்றியும் கிடைக்கவில்லை.

அமெரிக்க விமானிகள் வடவியட்னும் தலைநகரான ஹனேய்க்கருகேயுள்ள இராணுவ நிலையங்கள் மீது குண்டு வீசித்தாக்கின.

கெய்ஸானில், அமெரிக்க மாலுமித்துருப்புகளின் தளங்களை வடவியட்னுமியர் தொடர்ந்து தாக்கினர்.

சைகோனையும், அதைச் சுற்றியும் வியட்கொங்கியர் தமது தாக்குதல்களைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

## மே. ஆசிய விசேஷ பிரதிநிதி

### ஐ. நா. திரும்புமாறு அழைப்பு

நியுயோர்க், பெப். 27

ஐ. நா. பொதுக் காரியதரிசி யுதாண்ட், மேற்கு ஆசியாவில் தமது விசேஷ தூதவரான டாக்டர் குணர் ஜாரிங்கைத் திருப்பியழைத்துள்ளார்.

மேற்கு ஆசிய சமாதானம் பற்றிய டாக்டர் ஜாரிங்கின் நடவடிக்கைகளை அவருடன் விவாதித்து, புதிய ஆலோசனைகளை ஆராயவுமே யுதாண்ட் அவரை அழைத்துள்ளார்.

தற்போது அம்மானில் விஜயம் செய்யும் டாக்டர் ஜாரிங், ஜெரூசலம் சென்றுவிட்டு, நாளை நியுயோர்க் வந்தடைவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

## அதிக வெப்பத்தில் 11 பேர் மரணம்

மெல்போர்ண், பெப் 27

சென்ற வார இறுதியில் இங்கு கிளம்பிய கடும் வெப்பத்தில் 11 பேர் உயிரிழந்தனர். அதிக வெப்பத்தினால் ஏற்பட்ட களைப்புக்காக, ஆயிரக்கணக்கானோர் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றனர்.

வெப்ப நிலை நேற்று 106 டிகிரி பாரன்கேட்டாகவிருந்தது.

வெப்பத்திலிருந்து தப்ப, பல்லாயிரக்கணக்கான மக்கள் கடற்கரைகளை முற்றுகையிட்டனர்.

# வண. மக்காரியோஸ் மீண்டும் சைப்பிரஸ் ஜனாதிபதி

நிக்கோஸியா, பெப். 27

சைப்பிரஸ் ஜனாதிபதியாக வண. மக்காரியோஸ் மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

இங்கு நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல்களில், 90 சத வீதத்துக்குமதிகமான வாக்குகள் வண. மக்காரியோசுக்குக் கிடைத்தன. ஏறத்தாழ 228,000 சைப்பிரியர்கள் வண. மக்காரியோசுக்குத் தமது ஆதரவை தெரிவித்துள்ளனர்.

வண. மக்காரியோசை எதிர்த்துப் போட்டியிட்ட அபேட்சகருக்கு, மொத்த வாக்காளரில் 2 1/2 சத வீதத்திலும் சற்று அதிகமானோரே வாக்களித்தனர்.

சைப்பிரஸ் ஜனாதிபதி தேர்தல், ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை நடத்தப்படவேண்டுமென்பது தான் சட்டம். ஆனால், சைப்பிரஸ் சுதந்திரமடைந்த வருடமான 1960-ல் அதன் முதல் ஜனாதிபதியாக வண. மக்காரியோஸ் தெரிவு செய்யப்பட்டபின், நாட்டில் நிலவிய இனப்போர் காரணமாக, இப்போது தான் முதற்தடவையாகத் தேர்தல் நடந்துள்ளது.

## அடுத்த சீனத்தலைவர் லின் பியாவோ?

ஹொங்கொங், பெப். 27

சீனத் தலைவர் மா-சே-துங்கின் கொள்கையைப் பின் பற்றும் இராணுவ அதிகாரிகளின் காங்கிரஸில் மா-சே-துங்கின் இலட்சிய வாரிசு, பாதுகாப்பு மந்திரி லின் பியாவோ என ஏற்றுக் கொள்ளப்பட்டது. பீகிங் ரேடியோ இதனை அறிவித்தது.

யாழ். ஆஸ்பத்திரியில்

## மீண்டும் இவ்வித திருட்டுக்கள்

யாழ்ப்பாணம், புதன்

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் மீண்டும் சைக்கிள்களின் உபகரணங்கள் களவாடப்படுவது அதிகரித்துள்ளதாம். பொதுமக்கள் சைக்கிள்களை பாதுகாக்கவென தனியாக ஒரு பகுதி இங்கு அமைக்கப்பட்டுள்ள போதிலும் களவுபோவது இன்னமும் குறையவில்லையாம்.

இங்கு அதிகரித்து வந்த சைக்கிள் களவைத் தடுக்க வைத்தியஅதிகாரி, பொலிஸ் அதிகாரி ஆகியோரின் ஆலோசனையுடன் இங்கு தகுந்த பாதுகாப்பு நிலையம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டது. இருந்தும்இங்கு கடந்த சில நாட்களாக சைக்கிள் உபகரணங்கள் களவுபோவது அதிகரித்துள்ளதாக பொலிஸில் பலர்புகார் செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினமும் இங்கு விடப்பட்ட சைக்கிள் ஒன்றின் 'லைட்' களவாடப்பட்டுவிட்டதாம். சைக்கிள் பாதுகாப்புநிலையம் அமைக்கப்பட்டபோதிலும் இதற்குப் பொறுப்பாக ஆஸ்பத்திரி ஊழியரோ பொலிசாரோ இங்கு நியமிக்கப்படாததுதான் இதற்குக் காரணம்என பலரும் அதிருப்திகொண்டுள்ளனர்.

[கா. நி]

## சங்க நிர்வாகிகள்

கி. மு. சங்க நிர்வாகிகள்

சுழிபுரம், செவ்

தொல்புரம் கிராம முன்னேற்றச்சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில்நடப்பு வருட நிர்வாகிகளாகப் பின்வருவோர் ஏகமனதாகத் தெரிவு செய்யப் பட்டனர். தலைவர். இ. அ. வைத்திலிங்கம், உபதலைவர். கு. கணபதிப்பிள்ளை, காரியதரிசி. மு. தாமோதரம்பிள்ளை, உபகாரியதரிசி. கா. சின்னத்துரை, தனாதிகாரி. மு. கிருஷ்ணா. ஆறுபேர் கொண்ட நிர்வாகசபையும் தெரிவு செய்யப்பட்டது


# கழிவுக் காகிதத்தை பணமாக்க உதவுக

"கழிவுக் காகிதம்" என்று எதனையும் எறியவேண்டா

தினமும் உங்கள் அலுவலகத்திலும் வீட்டிலும் குப்பைக் கூடையில் எறியப்படும் பல்லாயிரம் எடையுள்ள காகிதங்கள் எம் காகிதக் கைத்தொழிலுக்கு முக்கியமான மூலப் பொருளாகும்.

இக்காகிதத்தைச் சேகரித்து நாட்டுக்கு வெளிநாட்டுச் செலவாணியைச் சேமியுங்கள்

வீணாக எறியப்படும் இப்பொருளில் நின்று மேலதிகப் பணம் பெறுங்கள்

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் கழிவுக் காகிதச்சேகரிப்பை பொறுப்பேற்க சமூக சேவா சங்கங்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோருகின்றது.

விபரங்களுக்கு:

கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்
135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

அன்பு எதையும் வெல்லும். நம் மனதில் தெய்வீக அன்பு உதித்துவிட்டால், மோசமான சுயநல வெறிகளும் அடங்கும். அந்த அன்பு இறைவனின் பிரசாதம். அது கிடைத்தால், நாம் காக்கப்படலாம், பிறரையும் காக்கலாம்.

—சுவாமி ராமதாஸ்

ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegrams: EELANADU Jaffna
Post Box: 49 Jaffna
Telephone: 389.

யாழ்ப்பாணம் பிலவங்க வருஷம் மாசி மாதம் 16ம்திகதி [28-2-68]

ஆசிரியருக்குக் கடிதங்கள்

## மலேரியாவைத் தடுப்பதில் சுகாதார அமைச்சின் அக்கறையின்மை

மலேரியா பரவுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் முன்னரிலும் பார்க்க அதிக நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளதுடன், பல லட்ச ரூபாயையும் செலவிடுகிறது.

ஆனால், முதல் முதலில் மலேரியா வியாதி பீடிக்கப்பட்டதாகச் சிலர் கண்டுபிடிக்கப்பட்டபோது, சுகாதார இலாகா, தனது உத்தியோகத்தர்களை வெளியூர்களுக்கு அனுப்பிவைத்தது. இந்த உத்தியோகத்தர்கள் அதிக வேலை ஒன்றும் செய்யவில்லை. ஆனாலும், இவர்கள் பல நோயாளிகளின் இரத்தப்படங்களைக் கொழும்புக்கு அனுப்பி வைத்தனர். ஆனால் இவற்றில் 10 சதவீதம் தானும் பரிசோதிக்கப்படவில்லை. மிகுதி ஆயிரக்கணக்கான படங்களுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லை. இப்படங்கள் யாவும் உடனடியாகவும், கவனமாகவும் பரிசோதிக்கப்பட்டு, பயனுள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தால், சில வருடங்களுக்கு முன்னரே, மலேரியா பரவாமல் தடை செய்திருக்கலாம்.

மலேரியா பரவக்கூடும் என்பதைப்பற்றிச் சுகாதார அமைச்சைச் சேர்ந்த அதிகாரிகள் யாரும் முன்கூட்டியே அக்கறை ஏதும் எடுத்தார்களா? அவர்கள் எல்லோருக்கும் பதவி உயர்வு கிடைத்ததேயன்றி வேறொன்றும் இல்லை.

நிலைமையை முன்கூட்டியே அறிந்துகொள்ளவோ அல்லது தேவையான தடை நடவடிக்கைகளை உடனடியாக எடுக்கும் நிர்வாகத்திறமையோ சுகாதார அமைச்சிடம் இருக்கவில்லை. திறமையின்மை, கடமை தவறுதல், பணிவின்மை ஆகிய குற்றங்களுக்கு அதிகாரிகள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதில் அமைச்சுக்கு நம்பிக்கை கிடையாது.

சுகாதார நிர்வாகத்தைச் சீர்திருத்தப் பிரதம மந்திரி உடனடியான, கடுமையான நடவடிக்கைகள் எடுக்க வேண்டியது அவசியம்.

டாக்டர் கே. கனகரத்தினம்

## வகுப்பு அரசியல் ஒழிய

இலங்கையிலே வகுப்புவாத அரசியல் ஒழிவதற்கு கல்முனை இடைத்தேர்தல் ஓர் ஆரம்பமாக இருக்கும் என்று எதிர்க்கட்சித் தலைவர் வெளியிட்டுள்ள ஒரு முக்கிய அறிக்கையில் கூறுகின்றார். இது ஒழியவேண்டுமென்பதே தமிழர் உள்ளிட்ட எல்லாத் தேசாபிமானிகளின் விருப்பமுமாகும்.

சிங்களமும் தமிழும் அரசாங்க மொழிகளாக இருக்குமென்றிருந்த தேசிய ஒற்றுமைக்கான ஏற்பாட்டை முதல்முதல் குலைத்து, வகுப்புவெறியைக் கிளப்பிவிட்டது யார்? தனிச்சிங்களச் சட்டத்தைக் கொணர்ந்து தமிழ்ப்பேசும் மக்கள் இந்நாட்டில் தலைநிமிர்ந்து சரிநிகர் சமானமாக வாழ முடியாமல், அவர்களை இரண்டாம் பட்சப் பிரஜைகளாக்கியது யார்? சமூக அமைதி நிலவிய இந்த அழகிய நாட்டிலே பயங்கர வகுப்புக் கலகம் ஏற்பட்டது யாருடைய ஆட்சிக்காலத்தில்? தமிழ் பேசும் மக்கள் அதையெல்லாம்மன்னிக்கலாம். ஆனால் எப்படி மறப்பது?

தமிழரசுக்கட்சி மாவட்டசபை கேட்பது வகுப்புவாதக்கோரிக்கை என்றும், இதை எதிர்த்தே கல்முனை முஸ்லிம்கள் இந்த இடைத்தேர்தலில் தீர்ப்பளித்துள்ளதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் கூறுகின்றார். இந்தக்குற்றச்சாட்டுக்கு தமிழரசுக் கட்சித் தலைவர்கள் தக்க பதில் அளிக்கலாம். அவர்களுக்காக நாம் பேச வரவில்லை. ஆனால் தமிழரசுக்கட்சியினருடன் தங்களுக்கு வேண்டிய சமயத்தில் ஒப்பந்தம் செய்து கொண்டு, பிரதேச சபையை அளிப்பதாகக் கூறியது யார்? தங்களுக்கு ஆதரவளித்தால், தமிழரசுக் கட்சியாரின் கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றுவதாக வாக்களித்து, அதனால் அதன் ஆதரவைப்பெற்று, ஐக்கியதேசியக் கட்சியின் ஆட்சியைக் கவிழ்த்த அரசியல் கதைகளை பொது மக்கள் மறக்கவில்லை.

தங்களை ஆதரிக்காமல், தங்களது அரசியல் எதிரியை ஆதரித்த கோபத்தால், தமிழரசுக்கட்சி மீது ஆத்திரம் ஏற்படுவது இயற்கையே. ஆனால் இதற்காக ஏற்கனவே ஒப்புக்கொண்டு நிறைவேற்றுவதாக வாக்களித்த கோரிக்கையையே, ஏதோ பெரிய தேசத்துரோகமென்றும் வகுப்புவாதம் என்றும் கூறி, தூற்றுவது அரசியல் நாணயமாகுமா? கல்முனை முஸ்லீம்கள் இதை நிராகரித்துவிட்டதாகக் கூறுவது சரியாகுமா? வாக்களவில் மத அடிப்படையிலும், மொழி அடிப்படையிலும் பிரித்துப் பேசுவதும் தமிழரசு அபேட்சகருக்கு வாக்களித்தால் முஸ்லீம்கள் விபூதி பூச நேரிடுமென்று கூறுவதும் வகுப்புவாதமில்லாவிட்டால் அது என்ன?

இந்நாட்டில் வகுப்புவாதம் அறவே நீங்கிஜனநாயகமும், ஒற்றுமையும் முன்னேற்றமும் ஏற்படவேண்டுமென்ற உண்மையான விருப்பம், தமிழர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் அந்த ஒற்றுமையைக் குலைத்து விட்ட தனிச் சிங்களச் சட்டத்தைத் தக்கபடி மாற்றி, தமிழ்பேசும் மக்கள் இந்நாட்டில் மானத்துடன் நிம்மதியாக வாழ இனியாவது ஸ்ரீ லங்கா மட்டுமன்றி, ஐக்கிய தேசியக் கட்சியும் முனையுமா என்பதுதான் முக்கிய கேள்வி. மொழிப்பிரச்னை முடிந்துபோன விஷயமாக யாராம் கருதுவதாயின் அது சரியாகாது. ஒரு தலைப்பட்சமாக நிறைவேறிய மொழிச்சட்டத்தினால், இந்நாட்டில் தமிழ்ப்பேசும் மக்கள் படும்மனவேதனை கொஞ்சமல்ல.

வகுப்புவாதம் கூடாதென்றும், தமிழரின் ஆதரவு வேண்டுமென்றும் இப்போது ஸ்ரீலங்கா கட்சியும் கல்முனைக்குப்பின் புதிதாக உணர்ந்து மொழிவிஷமாகத் தங்கள் மனப்பான்மையை மெதுவாக மாற்றிக் கொண்டு வருவது நல்ல அறிகுறி. இந்நாட்டில் வகுப்புவாதம் ஒரு கொடிய சட்டமாக உருவெடுத்ததென்றால் அதுதான் தனிச்சிங்களச் சட்டமாகும். தமிழ்பேசும்மக்களைப்பாதிக்கும் இவ்விஷயத்தில், ஸ்ரீலங்கா, ஐக்கிய தேசியக் கட்சிகள் ஒத்துழைத்து நிறைவேற்றியதை மறப்பதற்கில்லை. பிற கட்சிகளை தமிழ்த் தலைவர்கள் நம்பி, நம்பி, கால் பந்து போல அவர்களால் மாறி மாறி அடிக்கப்படுவதையிட்டு, தேசிய முறையிலே இப்பிரச்னைக்கு நிரந்தரமான நல்ல வழி காண, புதிய ஒற்றுமையுடன் முயற்சிக்க வேண்டும். எதிர்க்கட்சியின் மன மாற்றம் இதற்கு நல்லதோர் சகுனமாகும்.

## தியாகிகளுக்கு இலங்கைஅரசு விழா எடுக்குமா?

உலக உண்மைக்காக அல்லும் பகலும் அயராமல் உழைத்த உத்தமர்களை உலகம் என்றும் போற்றுகிறது. அத்தகையோர்க்கு சிலையெழுப்பி விழா வெடுத்து தலைவணங்குகிறது; ஞாபகச் சின்னம் பொறித்துக் கொண்டாடுகிறது; அங்ஙனமே ஒரு நாட்டில் பிறந்து வாழ்ந்து தன் குறிப்பிட்ட இனத்துக்கு அளப்பிலாச் சேவைசெய்து போந்தவர்களையும் குறிப்பிட்ட அவ்வின மக்கள் பாராட்டி விழா எடுத்து, அவர்களை ஞாபகம் செய்யும்வண்ணம்சின்னமமைத்து பெருமையடைகிறார்கள். ஆனால் இலங்கையில் இன, மத, சாதி வேறுபாடின்றி எல்லருக்கும் தன்னிகரில்லாத் தொண்டுசெய்த குணக்குன்றுப்பெரியார்களை ஈழவரசு சிறப்புச் செய்கிறதா? தன்னலமற்ற பணிபுரிந்து அழியாப் புகழ் பெற்ற உண்மைத் தியாகிகள் பொன்னம்பலம் அருணாசலம், சேர் பொன்னம்பலம்-இராமநாதன் மற்றும் ஆறுமுகநாவலர் முதலியோருக்கு இலங்கை அரசாங்கம் இதுவரையில் விழா எடுத்ததா? இல்லவே இல்லை. அதற்குக் காரணங்கள் என்ன? இனிமேலாவது விழிப்படைந்து அவ்வாறான உள்ளத்தால் உயர்ந்தோர்களுக்கு விழா எடுத்து, சின்னமமைத்து சிறப்பிக்குமா? அவ்வாறான செயல்களில் தமிழ் மக்கள் தம் கருத்துவேற்றுமைகளை உதறித் தள்ளி எறிந்துவிட்டு காலம் கழிக்காமல் கூடிய சிரத்தையெடுத்து இலங்கை அரசு அவைகளை அமுலுக்குக்கொண்டுவர வற்புறுத்தி ஆவனசெய்வார்களா?

செ. தருமராசா,
கீழைப் புலோலியூர்,
பருத்தித்துறை.

ஃ ஃ ஃ

## தமிழ் படித்த பாவமா?

17-2-1968 'ஈழநாடு' ஏட்டில் கதிரவேற்பிள்ளை கலாமன்றம் பண்டிதர் புலவர்களை மாணவ ஆசிரியர்களாக நியமிக்கவேண்டும் என்று விடுத்த கோரிக்கைகளைத் தொடர்ந்து மறுநாளே ஈழநாடு தனது ஆசிரியத் தலையங்கத்திலும் பண்டிதர் புலவர்களின் துன்ப நிலையை எடுத்துக்காட்டி அவர்களை ஆசிரியர்களாக நியமிக்கவேண்டியதன் அவசியத்தையும் விளக்கியிருந்தது செயல் காலத்தினாற்செய்த நன்றியாகும். அதற்காக ஈழநாடு ஆசிரியத் தலையங்கத்திற்கு எமது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இன்று இலங்கையில் பண்டிதர்களும் புலவர்களுமாக [illegible] பது பேர்களே வேலையற்றவர்களாக உள்ளனர். இவர்கள் பொ. த. ப. வகுப்பில் தேறியபின் நான்கு ஆண்டுகள் தமிழைக் கற்றவர்கள். பொ. த.ப. வகுப்பில் தேறியவர்களை மாணவ ஆசிரியர்களாக நியமிக்கவிருக்கும் அரசு, பண்டிதர் புலவர்களை நியமிக்குமேயானால் அதிக பயனைப் பெறும். தற்காலத்து சாதாரண எழுதுவினைஞராகச் சேருவதற்கே பொ. த. வகுப்பில் நான்கு பாடங்களில் திறமையான தேர்ச்சியும் வயதுக் கட்டுப்பாடும் விதித்துள்ளார்கள். இந்த விதிகளையெல்லாம் கடந்துவிட்ட பண்டிதர் புலவர்களுக்கு ஆசிரியர் தொழிலன்றி வேறு ஒன்றும் கிடைக்கப்போவதில்லை என்பதும் உறுதி.

பல தொழிலுமிருக்கக் கல்வி அதிகமென்றும் தாய் மொழியென்றும் தமிழைக் கற்றுவிட்ட பாவத்திற்காக வருந்தியழியும் இவர்களுக்காக 'தமிழ் காக்கும்' தலைவர்கள் இந்நேரம் இரங்குவார்களா?

வே. கந்தசாமி
தென்புலோலி,
பருத்தித்துறை.

### தமிழ் கலை விழா

கொழும்பு, செவ்.

தமிழ் இசை, நடன கலை விழாவொன்று ஏப்பிரல் மாதம் கொழும்பில் நடைபெறவிருக்கின்றது. இதில் கலந்து கொள்ள விரும்பவர்களை தலைவர், தமிழ் இசை நடன குழு, கலைக்கழகம், கொழும்பு என்ற முகவரிக்கு விண்ணப்பிக்கும்படி அறிவிக்கப்பட்டுள்ளது.

[5-ம் கலத்தொடர்ச்சி]

எங்கேனும் போகினும்
எம்பெருமானை
நினைந்தக்கால்,
கொங்கே புகினும் கூறை
கொண்டாறலைப்
பார் இலை
பொங்காடரவா புக்கொ
ள்ளியூர் அவிநாசியே
எங்கோனே உனை வேண்
டிக் கொள்வேன்
பிறவாமையே.

-ஸ்ரீசுந்தரமூர்த்திசுவாமிகள்

சீறி ஆடும் பாம்பை அணிந்தவனே! திருப்புக் கொளியூரிலுள்ள அவிநாசி எனும் திருக்கோயிலில் இருப்பவனே! எம்தலைவனே! எம்பெருமானாகிய உன்னை நினைத்தால், கொங்கு நாட்டிலே புகுந்தாலும் மற்றும் எங்கு சென்றாலும், எனக்கு ஒரு குறையுமில்லை. உன்னிடம் இனிப் பிறவாமை ஒன்றையே வேண்டிக்கொள்வேன் (நாயனாரை இறைவர் வழிப்பறி செய்து தணிமணிகளைப் பறித்தது கொங்கு நாட்டில்தான்)

## ஐயனார் எழுதுவது

இந்தியப்பிரதமர் இந்திராவின் புதல்வர் ராஜீவ் ஓர் இத்தாலியப்பெண்ணை விவாகம்செய்து கொண்டாரே, இது சரியா என்று கேட்கிறார் ஓர் அன்பர்.

இது அவர்களுடைய சொந்தவிஷயம், சரியா, தவறு என்று கேட்க நாம் யார்? அந்த இளம் தம்பதிகள் நீடுழி வாழ்க!

பிரதமர் இந்திரா, காஷ்மீர் பிராமண வகுப்பைச் சேர்ந்தவர். அவர் ஒரு பார்ஸிக்காரரான பிரோஸ் காந்தியை மணந்தார், தாய் எட்டடி என்றால் குட்டி பதினாறடி. ஆகவே ராஜீவ், ஓர் இத்தாலியப்பெண்ணை விவாகம் செய்ததில் வியப்பென்ன? யாதும் ஊரே யாவரும் கேளிர்!

அந்த மணப்பெண் சோனியாமைனோவைப்பற்றி சில விபரங்களைக் கேட்கிறீர்களா? அவருக்கு வயது 21. மாப்பிள்ளை ராஜீவைவிட இரண்டு வயது இளையவர். கத்தோலிக்கர். திருமணத்துக்குப் பின் அவர் மதம் மாறமாட்டாராம். ராஜீவ் இந்துவா அல்லது தந்தை வழியில் பார்ஸியா? பெயரைப்பார்த்தால் இந்து போலவேயுள்ளது என்றாலும் அவருக்கு தாத்தா நேருவைப்போல் உபநயனம் ஆகியிருக்குமா என்பது சந்தேகம்! இவ்விதக் கலப்பு மணத்துக்குப்பின் மதமும், சாதியும் என்ன ஆகும்! பெரிய இடத்து சமாச்சாரம்?

ஃ ஃ ஃ

இந்த இரண்டும் எங்கே முதல் முதல் சந்தித்தனராம் தெரியுமா? மூன்று வருடங்களுக்குமுன் கேம்பிரிட்ஜில். அங்குஆங்கிலம் கற்கச்சென்றாராம் மணப்பெண். அங்கு போசனசாலையில் இருவரும் சந்திப்பர். அச்சமயம் சோனியாவுக்கு ஆங்கிலம் ஒரு வார்த்தையும் தெரியாதாம். மாப்பிள்ளைக்கு இத்தாலி தெரியாது காதலுக்கு மொழி எதற்கு! ஒரு ஜெர்மன் வாலிபர்தான் அப்பெண்ணை ராஜீவுக்கு அறிமுகம் செய்துவைத்தாராம்.

மணப்பெண்ணுக்கு இப்போது இத்தாலிய மொழியுடன் ஸ்பானிஸ், ஜெர்மன், பிரெஞ்சு, ஆங்கிலம் சிறிது ரஷ்ய மொழி தெரியுமாம் இந்தியும் கற்றுக்கொண்டு வருகின்றார் சில சர்வதேச மகாநாடுகளில் அவர்மொழி பெயர்ப்பாளராக இருந்தாராம்.

பனிச் சறுக்கல், பனிநடனம், புஷ்பங்களை அலங்காரமாக வைப்பது, சேமியா எனும் 'ஸ்பாகெட்டி' சமைப்பது இவற்றில் அவருக்கு ஆசையாம் விவாகத்துக்குப் பின் இந்தியாவிலேயே அவர் இருந்து வேலைசெய்வாராம், என்னவேலை என்று இன்னும் தெரியவில்லை. மாமியாரான இந்திராவை, சில வாரங்களுக்குமுன்பே, 'மம்மி' என்று அழைக்க ஆரம்பித்துவிட்டார்.

அவருடைய தகப்பனார் கட்டட கண்ட்ராக்டராம். கல்யாணத்துக்கு மணப்பெண்ணின் தாயார், தங்கை சில உறவினர் இவர்கள் இத்தாலியிலிருந்து வந்தனரென்றும், தந்தைவர முடியாது போயிற்றென்றும் தெரிகிறது. பெற்றோரின் ஆசியைப் பெற்றே அவர் இம்மணம் செய்துகொண்டார். தீர்க்க சுமங்கலீபவ! புத்திரபௌத்திராதி விருத்தி ரஸ்து!

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் செல்லையா

# ஞாபகார்த்த வெற்றிக்கேடய உதைபந்தாட்ட போட்டிமுடிவு

புத்தூர், செவ்.

புத்தூர் வினஸ் கழக மைதானத்தில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் கவிஞர் மு. செல்லையாவின் ஞாபகார்த்த வெற்றிக்கேடயத்துக்கான 5-வது உதைபந்தாட்டச்சுற்றுப்போட்டியில் இதுவரையிலான முடிவுகள் பின்வருமாறு:

புத்தூர் வீனஸ்கழகம் எவறெஸ்ற் கழகத்தை 3—0 கோல்களால் வெற்றியீட்டியது. அல்வாய் சிவானந்தா ஆவரங்கால் யூப்பிற்றர் கழகத்தை 1—0 கோலால் வெற்றிகண்டது. அல்வாய் சிவானந்தா புத்தூர் எவறெஸ்ற் கோஷ்டியை 1—0 கோலால் வெற்றியீட்டியது. வீனஸ்கழகத்துக்கும் யூப்பிற்றர் கழகத்துக்குமிடையிலான கடும் மோதலில் யாருக்கும் வெற்றி தோல்வியின்றி ஆட்டம் முடிவடைந்தது. யூப்பிற்றர் கழகத்துக்கும் எவறெஸ்ற் கழகத்துக்குமிடையில் நடைபெற்ற போட்டியில் யூப்பிற்றர் 1—0 கோலால் வெற்றியீட்டியது.

# பாடசாலைகள் உடற்பயிற்சி போட்டி விபரம்

உடுப்பிட்டி, செவ்

அடுத்த மாதம் நடைபெறவிருக்கும் வட்டாரப் பாடசாலைகளின் உடற்பயிற்சிப் போட்டிகள் நிகழவிருக்கும் பிரிவுகளும் திகதியும் வருமாறு:-

[கிளிநொச்சி] கிளிநொச்சி மைதானம்-2-3-68, [நல்லூர்] கனகரத்தினம் மகா வித்தியாலய மைதானம்-3-3-68, (யாழ்ப்பாணம்) யாழ். மத்திய கல்லூரி மைதானம் -3-3-68, [உடுவில்] ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானம்-7-3-68, (வட்டுக்கோட்டை) சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி மைதானம் 8-3-68, [கோப்பாய்] கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி மைதானம் 9-3-68, (தெல்லிப்பழை) தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானம் 11-3-68, [சாவகச்சேரி] மட்டுவில் மகா வித்தியாலய மைதானம் 14-3-68, (ஊர்காவற்றுறை] அர்ச். அந்தோனியார் கல்லூரி மைதானம் 15-3-68, [பருத்தித்துறை] பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி 16-3-68, [உடுப்பிட்டி] உடுப்பிட்டி மகளிர் கல்லூரி 16-3-68.

இப்போட்டிகளில் உடற்பயிற்சி ஆசிரியர்கள் உள்ள சகல பாடசாலைகளும் கட்டாயம் பங்குபற்றவேண்டுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது. வட்டாரப் போட்டிகளில் அணிவகுப்பு முக்கிய இடம்பெறும். ஒவ்வொரு வட்டாரத்திலும் வெற்றியீட்டும் பாடசாலைகள் யாழ். மாவட்டப் பாடசாலைகள் உடற்பயிற்சிப் போட்டியில் பங்குபற்றும்.

## விக்டோரியா மாணவர் தெரிவு

சுழிபுரம், செவ்

இலங்கை வானொலி கூட்டுஸ்தாபனத்தினால் யாழ்ப்பாணப் பாடசாலைகளுக்கிடையே நடாத்தப்பட்ட பொது அறிவுப்போட்டியில் சுழிபுரம் அரசினர் விக்டோரியாக் கல்லூர் மாணவர்கள் நால்வர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்கள் நால்வரும் கொழும்பில் நடைபெறவிருக்கும் அகில இலங்கை பாடசாலைகளின் பொதுஅறிவுப்போட்டியில் கலந்து கொள்வதற்காக கொழும்பு செல்கின்றனர்.

செல்வன் எஸ். சண்முகரத்தினம் [தலைவர்] செல்வன். எஸ். சிவசுப்பிரமணியம், என். சிவரஞ்சன். எஸ். இரங்கராஜா ஆகியோரே கொழும்புக்குச் செல்கின்றார்கள்.

கிரிக்கெட்

## வெற்றி தோல்வி இல்லை

சுழிபுரம், செவ்வாய்

வடபகுதிக் கல்விக் கந்தோர் உத்தியோகஸ்தர்களுக்கும், சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரி ஆசிரியர் கோஷ்டிக்குமிடையே நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது. சுழிபுரம விக்ரோறியாகக் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு திரு. ஜெயராசசிங்கம் மத்தியஸ்தம் வகித்தார்.

## வை. எம். சி. ஏ. வென்றது

சங்கானை. செவ்.

பண்டைத்தரிப்பு வை. எம். சி. ஏ. கோஷ்டிக்கும் இளவாலை சென். அன்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே சென். ஹென்றி விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற சிநேக பூர்வமான கிரிக்கட் போட்டியில் வை. எம். சி. ஏ. இனிங்ஸ் 34 ஓட்டங்களை எடுத்து வெற்றியீட்டியது.

முதல் துடுப்பெடுத்தாடிய வை. எம். சி. ஏ. கோஷ்டி 123 ஓட்டங்களையும் சென் ஆன்ஸ் கழகம் 12 ஓட்டங்களையும் பெற்றது. இரண்டாவது ஆட்டத்தில் சென். ஆன்ஸ் 77 ஓட்டங்களைப் பெற்றது. திருவாளர்கள் போல், சிஞ்சிலி, லோபி பற்றிக்ஸ் ஆகியோர் அபாரமாக ஆடினர்,

திருவாளர்கள் பி. ஏ. யோகநாயகம், என். நவஜீவன் ஆகியோர் மத்தியஸ்தர்களாக கடமையாற்றினர்.

## 'விளையாட்டு மைதானம் அமைத்துத் தருக'

அச்சுவேலி, செவ்வாய்

அச்சுவேலிப் பகுதிக்குத் தனியாக ஒரு விளையாட்டு மைதானம் அமைத்துத் தரும்படி பத்தமேனி விநாயக சனசமூகநிலையத்தினர் ஏகமனதாகத் தீர்மானம் ஒன்றை நிறைவேற்றி கோப்பாய் எம். பி. திரு. கதிரவேற்பிள்ளைக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

தொண்டமானாறு பிரதான வீதிக்கருமாயையில் உள்ள முடிக்குரிய நிலத்தை விளையாட்டு மைதானமாக்கித் தருமாறு இவர்கள் கேட்டுள்ளனர்.

சுழிபுரம், செவ்வாய்

தொல்புரம் மத்திய சனசமூக நிலையத்தினர் தமது நிலையத்திற்கென ஒரு விளையாட்டு மைதானமில்லாது கஷ்டமனுபவித்து வருவதாகவும், இக்குறையைத் தீர்த்துவைக்க ஆவனசெய்ய வேண்டுமென்றும் வட்டுக்கோட்டை எம். பி யைக் மகஜர் மூலம் கேட்டுள்ளனர். சுழிபுரம் கிராமசபைக்குச் சொந்தமான நிலத்தைத் தமக்குச் சபை முன்னர் வழங்கியிருந்ததென்றும், அந்நிலத்தில் சபை இப்போது உரிமை பாராட்டி வருவதாகவும் [illegible] தாகவும் மகஜரில் கூறப்பட்டுள்ளது.

## இன்றைய பலன்

[28-2-68]

புதன்கிழமை

[மாசி மீ 16உ]

திதி - அமவாசை பகல் 1-08 மேல் பிரதமை

நட்சத்திரம்- சதயம் இரவு 9-35 மேல் பூரட்டாதி

ராகுகாலம்-12-29 — 1-59.

சுபநேரம் - 4-59— 6-29.

இன்று பிறந்தவர்களுக்கு- பனிமூட்டம் போல வாழ்க்கை அமையும். எதிலும் ஒரு மந்தநிலைமையே காணப்படும். உடல் நலமும் சிறிது பாதிக்கச் செய்யும். வாழ்க்கை புதிராகத்தோன்றினும் குடும்பத்தில் அன்புக்கும் அதரவுக்கும் இடமுண்டு சகோதர வழியால் சஞ்சலமேற்படலாம். தொழில்துறையில் முன்னேற்றம் ஆமைவேகத்தில் நடைபெறும். தெய்வ வழிபாடு சிறந்த பயன்தரும்

மேஷம் - மலையைக் கெல்லி எலியைப் பிடித்தல்

ரிஷபம்- உள்ளப் பூரிப்பு உவகைக்கூத்து

மிதுனம்- பிள்ளைப் பாசம், கொள்ளை இன்பம்

கடகம்- கண்துடைப்பு வேலை, கவனம்வேண்டும்

சிம்மம்- சொந்தமும், பந்தமும் சுவையுடன் சேரும்.

கன்னி. ஏகாந்த நிலை, எதிர்பாராத முடை

துலாம்- முதியவர் நட்பு, முன்னேற்றநிலை

விருச்சிகம்- வீறு நடைபோடு வெற்றி உனக்கே

தனுசு- முயற்சி வெல்லும், முதலிடமுண்டு

மகரம்- கரும்பாக இனித்தது வேம்பாக கசக்கும்

கும்பம்- பிரிவின் தாக்குதல், பின்தங்கநேரிடும்

மீனம்- கன்னல் மொழி கவர்ச்சியுமுண்டு

—சோதிடக்கலாநிதி
திருமலை வேலுப்பிள்ளை

## இந்துமாமன்ற நிர்வாகிகள்

நல்லூர், செவ்,

நல்லூர் அரசினர் ஆசிரியகலாசாலை இந்துமாமன்ற நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்: திரு. எஸ் துரைராசசிங்கம், செயலாளர்: திரு. ந. சிவபாதம், தனாதிகாரி: திரு. இ. சின்னப்பா

நிர்வாகசபை உறுப்பினர்கள்: திருவாளர்கள் வை. யோகேஸ்வர ஐயர், க. நடராசா, எம். சுன்னையா.

மேற்படி இந்துமாமன்றத்தினர் நடத்திய வள்ளுவர் குருபூசையில் 'திருக்குறள் இன்பம்' எனும் பொருள் பற்றி திரு எஸ். சின்னத்தம்பியும் வள்ளுவன் காட்டும் வழி' பற்றி திரு. ஏ. செல்லத்துரையும் உரை நிகழ்த்தினர். திரு. எஸ். துரைராசசிங்கம் தலைமையில் இவ்விழா நடைபெற்றது. திரு. ந. சிவபாதம் நன்றிகூறினார்.

## மாமியார் கொலை மருமகள் றிமாண்டில்

சாவி, செவ்வாய்

சனேகம எனுமிடத்தைச் சேர்ந்த திருமதிஹினிஹாமி என்பவர் கொலைசம்பந்தமாக இவரது மருமகளும் மூன்று பிள்ளைகளின் தாயுமான திருமதி ஏச். ஜி. முரியால் என்பவரை பத்தேகம பொலிஸ் கைதுசெய்து மாஜிஸ்திரேட் முன்னிலையில் ஆஜர் செய்தபோது மாஜிஸ்திரேட் அவரை அடுத்தமாதம் 4-ம் திகதிவரை றிமாண்டில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

மரணவிசாரணை நடத்திய திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு றெக்ஸ் விக்கிரமசிங்கா பொல்லால் அடிபட்ட காயங்கள் திருமதி ஹினிகாமிக்கிருந்ததாகத் தெரிவித்திருந்தார்.

பத்தேகம பொலிஸ்நிலைய இன்ஸ்பெக்டர் திரு. அபோகா சமரக்கோன் மேலும் புலன்விசாரணை நடத்தி வருகிறார்.

## வெள்ள நிவாரணம்

யாழ்ப்பாணம், புதன்

சமீபத்தில் ஏற்பட்ட வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட காரைநகர் பகுதி மக்களுக்கு சமூகசேவைப்பகுதியினர், இதுவரை சுமார் 5000 ரூபா வெள்ளநிவாரணம் வழங்கியுள்ளது.

இப்பணத்தைப் பாதிக்கப்பட்ட இடங்களைப் பார்வையிட்ட சமூகசேவை அதிகாரிகளான திரு. ஏ சி. துரைசிங்கம் திரு. ஏ. துரைசிங்கம் ஆகியோர் வழங்கியுள்ளனர். நெடுந்தீவில்வெள்ள நிவாரணப் பணமாக 13,000 ரூபாவும் நயினாதீவு அனலைதீவு, எழுவை ஆகிய இடங்களில் சுமார் 2000 ரூபாவும் வழங்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது எனினும் காரைநகர் கிழக்குப் பகுதியில் இதுவரை வெள்ளநிவாரணம் வழங்கப்படாததையிட்டு இப்பகுதி மக்கள் கவலைகொண்டுள்ளனர். [வி.நி]

## சீமெந்து தொழிலாளர் வசதிக்கு

அளவெட்டி, செவ்.

சீமெந்துத் தொழிற்சாலை தொழிலாளர்கள் இலகுவில் கட்டுப்பாட்டு விலைக்கு பொருட்களைப் பெறுவதற்கும் அவர்கள் கஷ்டங்களை போக்குவதற்கும் பிரதான வீதியில் சிமெந்துத் தொழிற்சாலை வளவுக்குள் பலநோக்குக் கூட்டுறவுக் கிளையொன்றும் அதிவிரைவில் இயங்க இருக்கின்றது.

## சிவராத்திரி விழா

யாழ்ப்பாணம், புதன்

நல்லூர் சட்டநாதர் சுவாமி கோவிலில் சிவராத்திரி விழா சிறப்பாகக்கொண்டாடப்பட்டது. இரவு சங்காபிஷேகமும், சுவாமி திருவுலாக் காட்சியும், திவ்ய ஜீவ சங்கத்தினரின் பஜனையும் அதிகாலைவரை நடைபெற்றது. [கா நி]

## நவீனபஸ்தரிப்பு நிலையம்

அளவெட்டி, செவ்.

சீமேந்து தொழிற்சாலைக்கு வந்துபோகும் பிரயாணிகள் தங்கிச் செல்வதற்கு சீமெந்துத் தொழிற்சாலை தமது செலவில் நவீனமுறைப்படி பஸ்தரிப்பு நிலையம் ஒன்று அதிவிரைவில் அமைக்கப்படவிருக்கிறது.

இப்பஸ்தரிப்பு நிலையம் பிரதான வீதியில் சிமெந்துத் தொழிற்சாலை முகப்பில் இடம்பெறும்.

## சிரமதானமூலம் மருத்துவசாலை

புன்னாலைக்கட்டுவன், செவ்.

ஊரெழு பர்வத பத்தினி அம்மன் ஆலயத்துக்கு அண்மையிலுள்ள கேணியை மூடி அவ்விடத்தில் சுரடுக்குக் கட்டடம் ஒன்றைக் கட்டும் பணியை ஊரெழு இளைஞர் விவசாயக்கழகம் மேற்கொண்டுள்ளது. இதற்கு முன்னோடியாக அச்சூழலிலுள்ள பகுதிகளைத் துப்புரவுசெய்து கேணியை மூடும் பணியில் அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவ்வுத்தேச சுரடுக்குக் கட்டடத்தின் மேல்மாடியில் வாசிகசாலையும், கீழ்மாடியில் ஓர் அரசாங்க இலவச மருத்துவசாலையும் நிறுவப்படவிருக்கின்றன. மேற்படி சிரமதான வேலையில் ஊரெழு கிராமமுன்னேற்றச்சங்கத்தினர் பங்குபற்றியுள்ளனர்.

## ரூ5,000 ஒதுக்கப்பட்டது

அளவெட்டி, செவ்வாய்

பழுதடைந்த வீதியை சீரமைக்ககாங்கேசன்துறைப் பட்டினசபை 5,000 ரூபாய் ஒதுக்கியுள்ளது. காங்கேசன் துறைப் பட்டினசபை 3ம் வட்டார எல்லைக்குள் இருக்கும் கூத்தியவத்தைவீதியை கல்லுப் போட்டுத் தார் ஊற்றி சீரமைப்புச் செய்து விவசாயிகளின்போக்குவரத்துக்கு உதவும்படி 3ம் வட்டார அங்கத்தவர் திரு. மு. திடவீரசிங்கம் பட்டினசபையைக் கேட்டுக்கொண்டதற்கிணங்க பட்டின சபை இவ் வீதியைத்திருத்த5,000 ரூமாவை ஒதுக்கிஇதற்கான ஒப்பந்தப்பத்திரம் கோரம்படுஇளது.

## கடலைத் தட்டுப்பாடு

அளவெட்டி, செவ்

கடலை வகைகளுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது இதனால் பொதுமக்கள் கஷ்டமுறுகிறார்கள். கோவில் சேவைகளுக்கும், மற்றும்தேவைகளுக்கும், பாவிக்கப்படும் கடலைகளான கொண்டக்கடலை, சிந்தாமணிக் கடலை ஆகியவை சங்கக் கடைகளிலும், தனியார் கடைகளிலும் கிடைக்காததால் பொதுமக்கள் கோவில் தேவைகளுக்கும், கூட்டுப் பிரார்த்தனை போன்ற முக்கிய விஷயங்களுக்கும் வீநியோகிக்க முடியாமல் கஷ்டமடைகிறார்கள்.

## திறமைக்கேற்ப தெரிவு

கிளிநொச்சி, செவ்

மாணவ ஆசிரியர் பரீட்சைத் தெரிவில் பரீட்சார்த்திகள் காட்டிய திறமைக்கேற்பவே தெரிவு நடைபெறுமென கல்வி அமைச்சர் திரு. ஐ. எம். ஆர். ஏ. இரியகொல்லை அரசாங்கபார்லிமென்ட் குழுக் கூட்டத்தில் தெரிவித்துள்ளார்.


இது சம்பந்தமாக சில எம். பிக்கள் கேட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே கல்வி அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

## கட்டிடம் முடிந்தும்...

மல்லாவி, செவ்

யோகபுரம் குளக்கோட்டரசன் கிராம முன்னேற்றச் சங்கத்தால் கட்டப் பட்ட நெசவு நிலைய வேலைகள் பூர்த்தியாகி அடுத்த மாதம் 2-ம் திகதி திறக்க ஆயத்தம் செய்யப்பட்டும் இது வரை கைத்தறிகளோ நெசவு ஆசிரியையோ நியமிக்கப்படவில்லை ஆதலால் இந்நெசவு நிலையத் திறப்பு விழா காலவரையறையின்றி ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# டிஸ்பிரின்

**கரையக்கூடிய டிஸ்பிரின், வலி, காய்ச்சல், தடிமல், டெங்குச் சுரம், பல் வலி, தசை நார் வலிகள் நோவுகளிலிருந்து வன்மையான துரித நிவாரணம் தருவதென்று பெரிதும் ஏற்கப்படுவது.**

டிஸ்பிரினின் கூட்டுப் பொருள்கள், டெங்குச் சுரம், காய்ச்சற் குணம் ஆகியவற்றால் உடம்பின் சந்துகளில் ஏற்படும் நோவுகளை அகற்ற உதவுகின்றன.

டிஸ்பிரின் கரையக்கூடியது; அது கரையக்கூடியதாகையால் இரத்தோட்டத்தில் விரைவாகச் செறிகிறது; விரைவாகச் செறிவதால், டிஸ்பிரின் துரிதமான வன்மையான நிவாரணம் தருகிறது.

டிஸ்பிரின் முற்றிலும் கரைவதாகையால், வன்மையும் பாதுகாப்பும் ஒருங்கே வாய்ந்தது. அது, வேறு விளைவுகளை ஏற்படுத்தக்கூடிய கரையாத துகள்கள் எவையும் உங்கள் வயிற்றில் தங்க விடுவதில்லை.

விரிவாகப் பாவித்தும் பரீட்சித்தும் ஒப்பிட்டும் பார்த்த பின், உலகெங்குமுள்ள டாக்டர்களால் பரந்தளவில் தேர்ந்தெடுக்கப்படுவதால், டிஸ்பிரினை நம்பிக்கையுடன் உபயோகிக்கலாம்.

டிஸ்பிரின் அலுமினிய உறையில் சுற்றிச் சீலிடப்பட்டிருப்பதால் நன்கு பாதுகாக்கப்பட்டிருக்கிறது.

கரையக்கூடிய டிஸ்பிரின் – வன்மையான பாதுகாப்பான துரித நிவாரணத்துக்கென விசேஷமாக உருவாக்கப்பட்டது.

டிஸ்பிரினைக் கரைத்துப் பருகுங்கள்; அல்லது மாத்திரையாக விழுங்குங்கள்

RC-852


## உற்சவம்

உடுப்பிட்டி, செவ்.

அல்வாய் வடக்கு ஆதி வீரபத்திரர் கோவில் வருடாந்த உற்சவம் அடுத்த மாதம் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத்தினங்கள் திருவிழா நடைபெறும் 13-ந் திகதி தேர் உற்சவமும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறவிருக்கிறது.

## மயிலிட்டி கி. ச. தேர்தல்

அளவெட்டி, செவ்

மயிலிட்டி கிராம சபையின் தேர்தலுக்கான நியமனப்பத்திரங்கள் இம் மாதம் 29-ம் திகதி ஏற்றுக்கொள்ளப்படும்.

சென்ற முறையிலும் பார்க்க இம்முறை பல வட்டாரங்களிலும் நேரடிப் போட்டி இருக்குமெனத் தெரிகிறது.

# தமிழ்மொழி

## பாடத்திட்டம் (அ)

**மாதிரி வினாக்கள்**

1. பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிக:-
   - [i] இலங்கைப் போக்குவரத்துச் சேவையைச் சீர்ப்படுத்துவதற்கு நீர் கூறும் ஆலோசனைகளை விளக்கி எழுதுக.
   - [ii] 'புகைவண்டி நிலையக் காட்சி' பற்றி எழுதுக.
   - [iii] பாடசாலையிலுள்ள சங்கமொன்றின் செயலாளராக நீர் இருப்பின் வருட முடிவிலே சமர்ப்பிக்கும் ஆண்டறிக்கை ஒன்று எழுதுக.
   - [iV] ''வல்லவனுக்குப் புல்லும் ஆயுதம்'' என்னும் பழமொழியை அடிப்படையாகக் கொண்டு ஒரு கதை எழுதுக.
   - [V] ''விஞ்ஞான அறிவு சமய உணர்ச்சியை வளர்க்க உதவும்'' இதற்குச் சாதகபாதகமான கருத்துக்களை விளக்கி எழுதுக.
   - [Vi] நீர் படித்துச் சுவைத்த நூலைப் பற்றி விமர்சனம் எழுதுக.

2. பின்வரும் உரைப்பகுதியின் சாரத்தை மூன்றிலொரு பங்காகச் சுருக்கி எழுதுக:-

மனிதன் புறத்தூய்மை காத்து உடலோம்புவதுடன் அகத்தூய்மையுங் காத்துவரல்வேண்டும். புறத்துக்கும் அகத்துக்கும் இயைபு உண்டு. 'அகமே புறம்' என்று அகத்திணைவல்லார் கூறுப. அகத்தூய்மை காவாது புறத் தூய்மை காப்பதால் மனித வாழ்வின் நோக்கம் நிறைவேறாது. அகத் தூய்மை காத்தற்குரிய முறைகள் பற்பல. அவற்றை ஈண்டு விரிக்கிற் பெருகும். அகத் தூய்மைக்கு ஆணிபோன்ற ஒன்றை ஈண்டுக் குறிப்பது நலம். அஃது ஏது? அது வாய்மை என்பது?

வாய்மை என்னுஞ் சிறப்ப அறத்தை ஒருவன் கடைப்பிடித் தொழுகுவானாயின், அவன்பால் பிற அறங்களெல்லாம் தாமே அமையும். வாய்மை, அறத்தின் தலையாயது; ஆணி போன்றது; உயிர் போன்றது. அஃதுள்ள இடத்தில் எல்லாமிருக்கும். அதைப் பெறவே மனிதன் பல்வித நல்ல வழுக்க ஒழுக்க வாழ்க்கையை மேற்கொள்ளக் கடமைப்படுகிறான். வாய்மையைப் போற்றாத நாட்டார்க்கு; அறிஞரில்லை. உலகில் தோன்றிய பெரியோர் அனைவரும் வாய்மையைக் காத்தே பெரியோராயினர்.

[3] பின்வரும் செய்யுள்களை வாசித்து அவற்றின் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக.

[I] சாதியிரண் டொழிய வேறில்லைச்
சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின் —மேதினியில்
இட்டார் பெரியோர் இடாதார்
இழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி.
பட்டாங்கில்—உண்மை நூல்களில்

[II] எண்ணி பொருகருமம் யார்க்குஞ்செல்
லொண்ணுது
புண்ணியம் வந்தெய்து போதல்லால்
—கண்ணில்லான்
மாங்காய் விழஎறிந்த மாத்திரைக்கோ
லொக்குமே
ஆங்கால மாகும வர்க்கு.

[III] வருந்தி யழைத்தாலும் வாராத வாரா
பொருந்துவன போமினென்றாற் போகா—
இருந்தேங்கி
நெஞ்சம்புண் ணாக நெடுந்தூரந்
தாமினைந்து
துஞ்சுவதே மாந்தர் தொழில்

[அ] இச்செய்யுள்களின் பொருளைத் தொகுத்தெழுதுக.
[ஆ] மாந்தர் தொழில் யாது?
[இ] முதலாஞ் செய்யுளிற் குறிப்பிட்ட இருவகைச் சாதிகள் எவை?
[ஈ] மேதினி, துஞ்சுவது, மாந்தர், நெறி இச் சொற்கள் ஒவ்வொன்றினதும் பொருளைக் குறிக்கும் வேறு சொற்கள் ஒவ்வொன்று தருக.
[உ] முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று, பண்புத் தொகை, வினையாலணையும் பெயர், நிகழ்கால வினையெச்சம் என்பவற்றுக்கு இச்செய்யுள்களிலிருந்து உதாரணம் தருக.

[4] பின்வருவனவற்றின் பொருள் விளங்க அவற்றை வாக்கியங்களி லமைத் தெழுதுக:-
நிந்தை, மதிவீனம், இல்லறம், அழைப்பு, உறக்கம், கருணை, இன்னல், பக்குவம், வஞ்சனை, களங்கம்.

[5] பின்வருவனவற்றின் பொருள் நன்கு புலப்படுமாறு அவற்றைத்தனித்தனிவாக்கியங்களில் அமைத்தெழுதுக:-
ஒன்றுபடுதல், உடன் கட்டை ஏறுதல், கருவறுத்தல், மண்போடுதல், முகத்திரிதல்.

(விடைகள் 7-ம் பக்கம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உபசாரம்

உடுப்பிட்டி, செவ் வடமராட்சிக் காரியாதிகாரிக் கந்தோரில் லிகிதராகக் கடமையாற்றித் தென்மராட்சிக் காரியாதிகாரிக் கந்தோருக்குப் பிரதம லிகிதராகப் பதவி உயர்வுடன் இடமாற்றம் செய்யப் பட்டதை முன்னிட்டு திரு. ஜெயசீலனுக்கு வடமராட்சிப் பகுதிக் கிராம சேவையாளர்களும், காரியாதிகாரிக் கந்தோர் ஊழியர்களும் பிரிவு உபசாரம் அளித்தனர்.

திரு. ஜெயசீலனுக்குத் தங்கச் சங்கிலி ஒன்றும் அன்பளிப்பாகக் கொடுக்கப் பட்டது.

## மயிலங்கூடல மக்கள் கஷ்டம்

அளவெட்டி, செவ். இளவாலையை அடுத்த மயிலங்கூடலில் இருந்த தபால் பெட்டியை பழுது பார்க்க தபால் பகுதியினர் எடுத்துச்சென்று பல மாதங்களாகியும் இன்னும் அவ்விடத்தில் நிறுவப்படவில்லையாம்,

இக்கிராமத்தில் உள்ள பொது மக்கள் தபால் போடுவதற்கு இரண்டு மைல் தூரத்திலுள்ள இளவாலைக்கு செல்ல வேண்டி இருக்கிறது. இதனால் இப்பகுதி மக்கள் அதிக கஷ்டமடைந்துவருகிறார்கள்.

# தமிழ்மொழி

### விடைகள்

3. செய்யுள்களின் பொருள்:-

(அ) சொல்லுமிடத்து இப்பூமியில் இரண்டு சாதியேயல்லாமல் வேறு சாதியில்லை. ஒழுக்கத்தினின்று பிழையாத வழியின் முறைமையால் ஏழைகளுக்குக் கொடுப்பவர் உயர்ந்த சாதியார். கொடாதவர் தாழ்ந்த சாதியார். இது உண்மை நூல்களிற் சொல்லப்பட்டிருக்கும் விதமாம்.

யாவருக்காயினும் புண்ணியம் வந்து கூடும் காலத்திலல்லாமல் ஆலோசித்து ஒரு காரியத்தைச் செய்து முடித்தல் முடியாது. புண்ணியம் வந்து கூடாத காலத்திற் செய்யுங் காரியமானது குருடன் மாங்காய் விழும்படி வீசிய அளவுகோலினை ஒத்திருக்கும். ஆகுங்காலத்தில் அவர்களுக்கு நினைக்குங் காரியம் தானே முடியும்

வருந்திக்கூம்பிட்டாலும்வாராதவைகள் வாராவாம். வரத்தகுந்தவை போய்விடுங்கள் என்று வெறுத்தாலும் நீங்கிப் போகாவாம். இவ்வுண்மையையறியாது மனிதருடைய தொழிலாவது யாதெனின் உலகில் இருந்துகொண்டு ஏக்கமுற்று மனம் புண்ணுகும்படி தாம் நெடுந்தூரஞ் சிந்தித்து அவை கைகூடாமுன்னமே மாண்டு போவதேயாகும்.

(ஆ) உலகில் இருந்து ஏங்கி மனம் புண்ணுகும்படி தாம் நெடுந்தூரம் சிந்தித்து மாண்டுபோவதே மாந்தர் தொழிலாகும்.

(இ) இருவகைச் சாதிகள்.
(i) இட்டவர் பெரியோர்.
(ii) இடாதவர் இழிகுலத்தவர்.

(ஈ) மேதினி—பூமி.
துஞ்சுவது—இறப்பது.
மாந்தர்—மனிதர்.
நெறி — வழி.

(உ) முன்னிலைப் பன்மை ஏவல் வினைமுற்று:-போமின்
பண்புத்தொகை-நெடுந்தூரம் [நெடுமையாகிய தூரம்]
வினையாலணையும் பெயர்:-இட்டார்.
நிகழ்கால வினையெச்சம்:-விழ

4. சொற்களை வசனங்களிலமைத்தல்.

நிந்தை:- துரியோதனன், விதுரன் கூறிய புத்திமதிகளைக் கேளாது அவனை நிந்தை செய்தான்.

மதியீனம்:- பரதன்மீது கோபங்கொண்டு எதிர்க்கச் சென்ற குகன் தன் செய்கை மதியீனம் என்பதைப் பின்னர் உணர்ந்துகொண்டான்.

இல்லறம்:- அன்பும் அறமும் இல்லறத்திற்குரிய சிறந்த பண்புகள்.

அழைப்பு:- செங்குட்டுவன் அழைப்பை ஏற்று ஈழமன்னன் கயவாகு கண்ணகிவிழாவிற் கலந்துகொண்டான்.

உறக்கம்:- உறக்கம் நீங்கிய கும்பகருணன் சீதையின் சிறை இன்னும் நீங்கவில்லையோ எனத் தூதுவரை விசாரித்தான்.

கருணை:- புத்தபிரான் கருணையே உருவானவர்.

இன்னல்:- இன்னலைக் கண்டு அஞ்சுபவனல்லன் வீமன்.

பக்குவம்:- அவரவர் பக்குவங்கண்டு போதிப்பதே ஞானசாரியரியல்பு.

வஞ்சனை:- சகுனி கூறிய வஞ்சனைக்குத் துரியோதனன் உடன்பட்டான்.

களங்கம்:- தன் குலத்திற்குக் களங்கமேற்படாமல் தசரத மன்னன் சொன்ன சொல்லைக் காப்பாற்றினான்.

5. குறிப்புப் பொருள் புலப்பட வசனங்கள் அமைத்தல்:


ஒன்றுபடுதல்:- கணவனும் மனைவியும் ஒன்றுபட்டு இல்வாழ்க்கையைச் செவ்வனே நடத்தினர்.

உடன்கட்டையேறுதல்:- அவள் தன் கணவர் இறந்ததைக் கண்டதும் தானும் உடன்கட்டை ஏறினாள்.

கருவறுத்தல்:- இராவணன் செய்கையால் இராமபிரான் இராக்கதர் குலத்தைக் கருவறுக்க முயன்றார்.

மண்போடுதல்:- பிறர் காரியங்கள் எல்லவற்றிலும் தடையாய் நின்று மண்போடுதல் இழிந்தோரியல்பு.

முகந்திரிதல்:- வருகின்ற விருந்தினர் முகந்திரிந்து நோக்கினால் அவர்கள் மனங்குழைந்து திரும்பிச் செல்வர்.


எப்பயிர்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை
அப்பயிர்க்கு 'ஷெல்' பூச்சி நாசினி பயனை பாவிக்காரெனில்.

AGENTS

றோயல் டிஸ்பென்ஸறி

PHONE 397 JAFFNA


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுபான்மை இனமக்கள் உரிமை யாவும் பாதுகாக்கப்படும்

## தாம் ஆட்சிக்கு வந்தால் இது நடக்கும் என்கிறார் சிறிமா

கொழும்பு, திங்கள்

சிறுபான்மை இன மக்களின் உரிமைகள் யாவும் தாம் ஆட்சிக்கு வந்தால் அளிக்கப்படுமென்றும், அவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுமென்றும் எதிர்க்கட்சித் தலைவி திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயகா இன்று பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### மாவட்டசபை

தேசிய ஒற்றுமைக்குத் தீங்கு விளைவிக்கக்கூடிய மாவட்ட சபையை வன்மையாகவும் கடுமையாகவும் எந்நேரத்திலும் எதிர்ப்போமென்றும் அவர் இந்த அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.

திருமதி ஸ்ரீமாவோ தமது அறிக்கையில் கல்முனை இடைத்தேர்தல் பற்றியும் விமர்சித்துள்ளார்.

### இடைத்தேர்தல்

கல்முனை வெற்றி இடைத்தேர்தலில் கிடைத்த வெற்றி மட்டுமல்லவென்றும் தேசிய அரசாங்கத்துக்கு எதிராக கிடைத்த மாபெரும் வெற்றியென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தமிழரசுக்கட்சியின் மாவட்டசபைக்கு எதிராகக் கிடைத்த வாக்குகளே அவையென்றும் ஸ்ரீமா குறிப்பிட்டுள்ளார்.

கடந்த மூன்று வருடங்களில் தமிழரசுக்கட்சியும் யு.என்.பி.யும் சேர்ந்து நடாத்தும் அரசாங்கத்தினால் மக்கள் அனுபவித்துக்கொண்டிருக்கும் கஷ்டங்கள் கொஞ்சமல்ல. நாடு பிற்போக்கான நிலையை நோக்கிப் போய்க் கொண்டிருக்கிறது என்றும் ஸ்ரீமா தமது அறிக்கையில் குறிப்பிட்டுள்ளார்.

# காலி வயோதிப மாதுக்கு யாழ்ப்பாண அன்பளிப்பு

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. வேணன் அபயசேகரா காலியிலுள்ள வறுமைப்பட்ட வயோதிப மாது ஒருவருக்கு ரூபா 1000 காசோலையை அன்பளிப்புச் செய்தார்.

யாழ்ப்பாண மாவட்ட சமூக சேவை இயக்கம் யாழ்ப்பாண மாவட்ட சமூகசேவை இயக்கத்தின் சார்பில் இந்த காசோலையை அவர் வழங்கினார்.

திருமதி கருணாவதி குணசேகராவே இந்த காசோலையைப் பெற்ற வயோதிப மாது

யாழ்ப்பாண மாவட்டத்துக்கு மட்டுமல்ல இலங்கையின் எப்பகுதிக்கும் உதவ சித்தமாயிருக்கிறது என யாழ்ப்பாண அரசாங்க அதிபர் காசோலையை வழங்குகையில் தெரிவித்தார்.

## உப உணவு உற்பத்தி போட்டி முடிவுகள்

உடுப்பிட்டி, செவ்

கரவெட்டி மேற்கு கிராம சேவையாளர் திரு. க.இரத்தினசிங்கம் நடாத்திய 1967-ம் ஆண்டுக்கான சிறுபோக உப-உணவு உற்பத்திப்போட்டு முடிவுகள் வருமாறு:-

சிறு தானியங்கள்:- கு.குலவீரசிங்கம் [தினை], சி.வைத்திலிங்கம் [சாமை], வீ.மனோகரன் [குரக்கன்]

சின்ன வெங்காயம்: சி. சிற்சபேசன், கா. வீரகத்தி, வீ. வேலுப்பிள்ளை.

நிலக்கடலை:- வே. கிருஷ்ணபிள்ளை, கு. ஜெயக்கொடி.

வடமராட்சிக் காரியாதிகாரி திரு. எஸ். ஜெயகாந்தன் இப்போட்டியில் வெற்றியீட்டியவர்களுக்குப் பரிசளிப்பதற்கென மூன்று மண்வெட்டிகளை அன்பளிப்பாக வழங்கினார்.

## யானை தாக்கியது

பூநகரி, செவ்வாய்

பூநகரி பல்லாய் வாசியொருவரை யானை தூக்கி எறிந்தது. யானையால் தாக்கப்பட்ட எஸ். கந்தையா என்ற பிரஸ்தாப நபர் வனவிலங்குகள் தமது கமத்துள் புகா வண்ணம் காவல் புரிந்து வந்ததாகவும், இரவு சமத்தில் பிரவேசித்த யானைகளைத் துரத்த முயன்ற போது யானையொன்று அவரைத் தாக்கியதாகவும் தெரிய வந்தது. காயமடைந்தவர் சிகிச்சை பெற்று வருகிறார்.

## சேவைக்கு பாராட்டு

அனுராதபுரம், செவ்.

அனுராதபுரம் விவேகானந்த தமிழ் மகா வித்தியாலயத்தில் ஆசிரியராகக் கடமையாற்றிய திரு. ந. சு. பசுபதிப்பிள்ளை நவாலியிலுள்ள யாழ். அட்டகிரி தமிழ்ப்பாடசாலைக்கு மாற்றலாகியுள்ளார். அவரது சேவையைப் பாராட்டுமுகமாக பாடசாலை ஆசிரியர், மாணவர்கள் பிரிவுபசார விருந்தொன்றை நடத்தினார்கள்.

## தோட்டத்தில் திருட்டு

புன்னாலைக்கட்டுவன், செவ்

தோட்டத்தில் வைக்கப்பட்டிருந்த நீரிறைக்கும் யந்திரத்தின் உதிரிப் பாகங்களும், வாழைக் குலைகளும் திருடப்பட்ட சம்பவம் ஊரெழுவில் நடைபெற்றது.

இது பற்றி சுன்னாகம் பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர்.

## நெடுந்தீவு நியமனப் பத்திரங்கள் இன்று தாக்கல்

யாழ்ப்பாணம். புதன்

நெடுந்தீவு கிராமசபைத் தேர்தலுக்கான அபேட்சகர் நியமனப் பத்திரங்கள் இன்று கிராம சபை மண்டபத்தில் உதவி தேர்தல் அதிகாரி திரு. பொ. முருகேசு முன்னிலையில் ஏற்றுக்கொள்ளப்பட விருக்கிறது [கா. நி]

## துப்பாக்கி பிரயோகம் சந்தேக நபர் றிமாண்டில்

யாழ்ப்பாணம், புதன்

கொடிகாமப் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகம் சம்பந்தமாக சந்தேகத்தின் பேரில் கந்தையா என்பவரைப் பொலிசார் கைது செய்தனர்.

இது சம்பந்தமாக சாவகச்சேரி பொலிஸில் செய்யப்பட்ட புகாரைத் தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு வடபகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கமும், உதவிப் பொலிஸ் அதிபர் திரு. டபிள்யூ வீரசிங்காவும் நேற்றுக்காலை விஜயம் செய்தனர்.

சந்தேகநபரான கந்தையா மாஜிஸ்டிரேட் முன்னால் ஆஜர் செய்யப்பட்ட பின்னர் றிமாண்டில் வைக்கப்பட்டார். பொலிசார் புலன் விசாரணை செய்து வருகின்றனர். (கா.நி.)

## 225 குடும்பங்களுக்கு நிவாரணம் கிடைக்கும்

உடுப்பிட்டி, செவ்

அண்மையில் கரணவாய் தெற்கில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு விமோசனம் கிடைக்க இருக்கிறது. இவர்களுக்கு வெள்ள நிவாரணம் வழங்குவதற்கென சமூக சேவைப் பகுதியால் 8,316 ரூபா சிபார்சு செய்யப் பட்டுள்ளதாகக் கரணவாய் தெற்குக் கிராமசேவையாளர் திரு. கே. வேலாயுதபிள்ளை தெரிவித்தார். இவ்வார இறுதிக்குள் வெள்ளத்தால் பாதிக்கப் பட்ட சுமார் 225 குடும்பங்களுக்கு இப்பணம் பகிர்ந்தளிக்கப் படும்.

## பொலிஸ் சுப்பிரிண்டன் சோதனையிட்டார்

யாழ்ப்பாணம், புதன்

இ. போ. ச. பஸ் சாரதிகளை வடபகுதி பொலிஸ் சுப்பிரிண்டனே சோதனையிட்டார். இச்சோதனைக்கு சுமார் 15 பஸ் சாரதிகள் இலக்கானார்களாம்.

பஸ்சாரதிகள் கடமையிலிருக்கும்போது அவர்கள் மதுபானம் அருந்தக்கூடாது என்று ஏற்கனவே பொலிசார் அறிவித்திருந்தனர். இதன் காரணமாகவே கடமையிலிருந்த இந்த பஸ் சாரதிகளை பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் வீதிகளில் மறித்து சோதனையிட்டார்.

மன்னார் வவனியா வீதியிலும், வவனியா மாங்குளம் வீதியிலும் சுமார் 15 பஸ் சாரதிகளை பொலிஸ் அதிபர் சோதனையிட்ட போது எவருமே மதுபோசையில் இருக்கவில்லையெனவும் சட்டத்தையும் ஒழுங்கையும் ஓரளவுக்கு நிலைநாட்டும் வகையில் சாரதிகளும் பஸ் ஊழியர்களும தற்போது நடந்து கொள்கின்றார்களென்றும் பொலிஸ் [illegible] வர் தெரிவித்தார்.

[கா. நி]

# திருமலைச் செய்திகள்

திருக்கோணமலை, செவ்.

திருகோணமலைப் பகுதிகளில் இம்முறை பின்மாரி நெற்செய்கைக்கான பொது மக்களின் அபிப்பிராயங்களையும் முடிவுகளையும் அறியும் வண்ணம திருகோணமலை மாவட்ட அராங்க அதிபர் திரு சோமபால குணதிராகத்தளாய் முதலிக்குளம் கலுமுட்டியான் குளம், அல்லை போன்ற விவசாயப் பகுதிகளுக்குச் சென்று அங்குள்ள விவசாயிகளைக் கலந்தாலோசிக்க விருக்கின்றார். இங்கு கடும்வெயில் காரணமாக இம்முறை விளைச்சல் சேதமுற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.

### நகரசபைத்தலைவா கண்டனம்

திருகோணமலை நகரசபை எல்லைக்குள் மணிக்கூண்டுக் கோபுரத்துக்கு அருகாமையில் உள்ளதும் சுங்கஇலாகாப் பகுதியினருக்குச் சொந்தமானதுமான ஒரு இடத்தை தனியார் துறைக்கு குத்தகையாகக் கொடுப்பதற்கு அரசாங்க அதிபர் மனுக்கோரியிருந்ததைத் தொடர்ந்து நகரசபைத் தலைவர் எஸ், சிவானந்தன் கண்டனம் தெரிவித்துச் சம்பந்தப்பட்ட திணைக்களத்தினருக்கு அவசரத் தந்தி அனுப்பியுள்ளார். இங்குள்ள பொதுசன மீன் சந்தைக்கு அருகே பிரஸ்தாபக் கட்டிடம் இருப்பதனால் இதிலே குடியேறும் தனியார் துறையினர் இவ்விடத்தில் தாமும் ஒரு மீன் சந்தையை ஏற்படுத்திப் போட்டியை ஏற்படுத்திவிடலாமென அவர் அச்சம் தெரிவித்துள்ளார்.

### திருமலை யுனைட் வெற்றி

திருக்கோணமலை யுனைட்டட் விளையாட்டுக் கழகத்திற்கும் டயமன்ட்ஸ் விளையாட்டுக் கழகத்திற்குமிடையே அண்மையில் நடைபெற்ற உதைபந்தாட்டமோதலின் போது யுனைட்டட் வீரர்கள் நாலு கோல்களால் வெற்றியீட்டினர். மத்தியஸ்தரின் வருகையில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக இப்போட்டி 30 நிமிடங்கள் தாமதித்தே ஆரம்பமாகியது.

### சமூகம்...........

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தோன்றிய வரலாற்றையும் அதன் நோக்கங்களையும் கூறிவிட்டு எந்த வகையிலும் அரசியல் கலப்பு இன்றி இச்சங்கத்தின் மூலம் பணியாற்றி புனிதமான சமயசேவை செய்ய சைவ மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து ஊக்கமுடன் உழைக்க வேண்டும் எனவும், புதிய ஊக்கத்துடன் சங்கத்தை வளர்க்க இளைஞர்கள் முழுமனதுடன் ஈடுபட வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

பின் வருபவர்களைக் கொண்ட ஓர் புதிய நிர்வாக சபையும் தெரிவு செய்யப்பட்டது.

கவியோகி சுத்தானந்தபாரதியாரைப் போஷகராகவும், வவுனியா எம். பி. திரு. அ. சிவசிதம்பரம், மேலதிக அரசாங்க அதிபர் திரு ஏ.பெருமையினார் ஆகியோர் உபபோஷகர்களாகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்-திரு. சதா ஸ்ரீனிவாசன், உப தலைவர்கள் திரு. எம். நடராசா, திரு. ஆர். வி. வில்வராசா, காரியதரிசி திரு. த. நல்லதம்பி, உபகாரியதரிசி திரு. செ. காசிநாதன். தனாதிகாரி திரு. எஸ். கனகரத்தினம். மேலும் திருவாளர்கள் த. இரத்தினசிங்கம், எஸ். சுப்பிரமணியம், கே. எஸ். சுப்பையா பிள்ளை, நா. சிவமுத்துலிங்கம், கா. த. புலேந்திரன் ஆகியோரை நிர்வாக உறுப்பினராகவும் தெரிவு செய்யப்பட்டனர்.

இச்சங்கத்தின் காணியில் ஓர் கலாச்சார மண்டபம் அமைப்பது, காணியைச் சிரமதான மூலம் திருத்துவது என்ற தீர்மானங்களும் ஏகமனதாகத் தீர்மானிக்கப் பட்டன.


## ஒரு நற்செய்தி

தமிழிலும் ஆங்கிலத்திலும்
சகலவித அச்சு வேலைகளும்
செய்வதற்கு

## ஈழநாடு அச்சகம்

பூரணமான நவீன சாதனங்களைக்
கொண்டுள்ளது என்பதை
மகிழ்ச்சியுடன்
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

சகலவேலைகளும் திருப்திகரமாகவும், சிறப்பாகவும் குறித்த நேரத்தில் செய்து கொடுக்கப்படும்.

விபரங்களுக்குத் தொடர்பு கொள்ளவும்

## ஈழநாடு லிமிட்டெட்,

63; சிவன்கோவில் மேற்கு வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 389


இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1968-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 28-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org